விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 30 புதன்கிழமை (15.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

# தமிழ் - அரசியல் தலைவர்களின் இறுமாப்பும், அகந்தையுமே அரசியல் பின்னடைவுக்கு காரணம்

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
எமது தமிழ் தலைவர்களின் தூர நோக்கற்ற சிந்தனைகளும், இறுமாப்புத் தன்மையும், அகந்தையும், சமூக வேறுபாட்டுக் கொள்கைகளினால் தான் நாம் தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளை சந்தித்துள்ளோம் என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி விஜயம் இன்று மடு செல்கிறார்

(கிளிநொச்சி)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.
நேற்று இரவு 7 மணியளவில் கிளிநொச்சி கரடிபோக்கு பகுதியில் அமைந்துள்ள தும்மினி விகாரை விகாராதிபதியை சந்தித்து 23

## ஆவா குழுவினர் ஆபத்தானவர்கள் அல்ல
### சட்ட ஒழுங்கு அமைச்சர்

(கொழும்பு)
தென்னிலங்கையில் செயற்படுகின்ற பாதாள குழுக்களை போன்று வடக்கில் இயங்குகின்ற ஆவா குழுவினர் பயங்கரமானவர்கள் அல்ல என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமை 23

## தாயகத்தில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் மத்திய அரசின் ஆதரவுடன் இடம்பெறுகின்றதா?
### அமைச்சர் அனந்தி சசிதரன் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)
தமிழர் தாயகப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும் அசம்பாவிதங்கள் மத்தியின் ஆதரவுடன் இடம்பெறுவதாகவே சந்தேகம் எழுந்துள்ளது என தெரிவித்த வடக்கு மாகாண



மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், இந்த அநீதிகளுக்கு எதிராக மக்கள் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். 23

## செஞ்சோலை படுகொலை 12-ம் ஆண்டு நினைவேந்தல்
### உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு



03

## நாட்டின் வருமானம் 10 சதவீதத்தால் அதிகரிப்பு – ரணில்

(கொழும்பு)
நாட்டின் வருமானத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்க முடிந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இலங்கையின் படுகடனை வரவு செலவுத்திட்டத்தின் 70 23

## நீதிமன்ற உத்தியோகத்தரின் சங்கிலி அறுக்கமுயற்சி
### யாழ். நகரில் பட்டப்பகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் (சிறுவர் நீதிமன்றம்) பணியாற்றும் பெண் உத்தியோகத்தரிடம் சங்கிலி பறிக்கும் முயற்சி அவரின் சாதுரியத்தால் தடுக்கப்பட்டது.
சங்கிலி பறிப்பைத் தடுத்து அந்த பெண் உத்தியோகத்தர் காயமடைந்தார். 23

## எழுத்து மூலம் ஆளுநர் கோரினால்
### பதவியை துறப்போம் திருமதி அனந்தி சசிதரன்

(கொழும்பு)
வடக்கு மாகாண அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்ற எண்ணப்பாடு ஆளுநருக்கு இருந்தால் அவர் எழுத்து மூலம் வடக்கு முதல்வருக்கு அறிவிக்கட் 23

## வடக்கு - கிழக்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பிரிட்டன் நிதி உதவி

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரச படைகளால் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமரும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி வழங்க ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்களை (ரூபாய் 203 மில்லியன்) உதவியாக வழங்குவதாக பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் புதிதாக மீள்குடியமர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கான வாழ்வாதார மற்றும் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி வழங்க இந்த 23

## தொழிலுக்கு சென்ற மீனவர் நடுக்கடலில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
கடற்றொழிலுக்குச் சென்ற தென்பகுதி மீனவர் ஒருவர் நடுக்கடலில் பயணித்துக்கொண்டிருக்கையில் மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார். தென்பகுதி நிக்கவிட்டியவை சேர்ந்த 23

## யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு கடும் காற்றுடன் கூடிய மழை
### பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண குடாநாட்டில் நேற்று இரவு சில இடங்களில் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பொழிந்தது. நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணி முதல் திடீரென பலமான சுழல் 23

## தமிழர் படுகொலைகளுடன் தொடர்புடைய கடற்படைச்சிப்பாய்
### குற்றப்புலனாய்வினரால் கைது

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை மற்றும் கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை உட்பட பல குற்றச்செயல்களுடன் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டவேலை செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுப வமுள்ளவர்கள் தேவை. குடும்பமாக தங்கு வதற்கு வசதியுண்டு. சம்பளம் 30.000/-, சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

தொடர்புகளுக்கு :- 077 168 1697, 076 620 5322

## நீர்வேலி வாள்வெட்டுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பிள்ளையார் கோவிலில் வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத் திய குற்றச்சாட்டில் 3 மாதங்களின் பின்னர் இரண்டு பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலி ஸார் தெரிவித்தனர்.

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் வைத்து மே 07 திகதி இளைஞர் கள் இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத் தப்பட்டது.

இது தொடர்பில் 24 மற்றும் 28 வயது டைய இருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் வி.இராமகமலன முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப் பட்டனர்.

சந்தேகநபர்களை வரும் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மேலதிக நீதவான் உத்தரவிட்டார். (ம)

## விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் மாடு, ஆடுகள் 25 (கிடாய், மறி) விற்பனைக்குண்டு.

T.P :-
077 168 1697, 076 620 5322

## வேலைவாய்ப்பு

DS-MAX Marketing international Pvt (Ltd) ஆகிய எமது நிறுவனத்தில் பின்வரும் பதவி களுக்கான வெற்றிடங்கள் உண்டு. ஆர்வமுள்ள வர்கள் தொடர்பு கொள்ளவும்.

| பதவி | வெற்றிடம் | வருமானம் |
|---|---|---|
| Sales Distributer | 10 | 25000 |
| Sales Supervisor | 06 | 30000 |
| Assistant Manager | 02 | 45000 |

தகைமைகள்

- O/L மற்றும் A/L
- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வயதெல்லை 18-30
- இறுதித்திகதி - 19.08.2018

(53699)

தொடர்புகளுக்கு :- 076 193 2118, 076 604 8878

## விற்பனைக்கு

யாழ். அல்லைப்பிட்டியில் 2 வயது நிரம்பிய கலப்பின நாம்பன் மாடுகள் மூன்றும் வண்டில் பழகிய 4 வயது எருது ஒன்றும் வளர்ப்புக்கு விற்பனைக்கு உண்டு. (பதிவு உள்ளது)

தொடர்புக்கு:- 077 756 0734

## காணவில்லை



வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைச் சேர்ந்த **அப்புத்துரை பத்மநாதன்** என்பரை காணவில்லை இவரை கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தயவுசெய்து அறியத்தரவும்.
உங்கள் மகன் குட்டி

TP : 072 9106007
Viber: 0044 7846016298, 00447440049588

## பகிரங்க ஏல விற்பனை

இலக்கம் 95, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் திற்கு சொந்தமான கல்வனைசு பைப்புகளினாலான நிழற் குடைகள் {வட்டக்குடில் **(Hut)**} 04 உம் அதற்கான நிறுத்தி களும் **(Stand)** பகிரங்க ஏல விற்பனை மூலம் 24.08. 2018ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மேற்படி சமாசத் தில் விற்பனை செய்யப்படவுள்ளது. எனவே ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் உரிய திகதியில் உரிய நேரத்தில் சமுகமளித்து ஏலவிற்பனைக்கான மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபாய் 250.00ஐ செலுத்தி ஏல விற்பனையில் கலந்துகொள்ளமுடியும். ஏலத்தின் மூலம் கோரப்படும் முழுத் தொகை யினையும் பணமாக உடனடியாகவே செலுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

(C-3507)

15.08.2018

தலைவர்,
யா.மா.கூ. கிராமிய வங்கிகளின் சமாசம்.

## வர்ணப் பூச்சு வேலைகள்

- வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் பாலஸ்தாபன வர்ணம் பூசும் வேலைகள் (கோபுரம், தூபிகள், உள்வளைவு வில்லு மண்டபம்) உள்ளன.

எனவே இவ் வேலைகள் தெரிந் தவர்கள் உடனடியாக ஆலய நிர்வாக சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-3514)

இங்ஙனம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்.

## வீடு கொள்வனவிற்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய இடங்களில் காணியுடன் கூடிய வீடு கொள்வனவிற்கு தேவை.

**இடைத்தரகர்கள் தேவையில்லை**

தொடர்பு :- 077 525 6311


World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2018

EQAA

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA

Apply now for New Intake 2018

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications
GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector


www.icbt.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தளிர்களை குண்டுவீசி கருக்கிய செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்











படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14ஆம் திகதி இலங்கை வான்படை கிபிர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவிகள் 54 பேர், பணியாளர்கள் 4 பேர் உட்பட மொத்தம் 61 பேரினது பன்னிரெண்டாவது ஆண்டு நினைவு நாள் நேற்று உணர்வுபூர்வமாக மக்களது கண்ணீருடன் நடைபெற்றது. படுகொலை இடம்பெற்ற வள்ளிபுனம் பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்ட விசேடமாக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (2-281-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடயம் தெரியாத இந்திய வீரர்கள்

## ஜெப்ரி போய்கொட் பாய்ச்சல்

இங்கிலாந்து ஆடுகளங்களில் தரமான 'சுவிங்' பந்துவீச்சாளருக்கு எதிராக எப்படி விளையாட வேண்டும் என்ற அடிப்படை விடயங்கள் கூட இந்திய வீரர்களுக்கு தெரியவில்லை. மூளையில்லாமல், முட்டாள்தனமாக செயல்படுகின்றனர்," என ஜெப்ரிபோய்கொட் தெரிவித்தார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் போராடி 31 ஓட்டங்களால் தோல்வியடைந்த இந்திய அணி, அடுத்த டெஸ்டில் கொஞ்சம் கூட எதிர்ப்பு' காட்டாமல் சரண் அடைந்து இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இதுகுறித்து இங்கிலாந்து முன்னாள் வீரர் ஜெப்ரி பொய்காட் (வயது-77), கூறியதாவது,

பொதுவாக கிரிக்கெட் என்பது ஏதோ ஒரு இடத்தில் மட்டும் விளையாடுவது அல்ல. பல்வேறு நாடுகளில், வெவ்வேறு ஆடுகளங்களில், முற்றிலும் வித்தியாசமான வானிலையில், சூழ்நிலைக்கு தகுந்து உங்களை மாற்றிக் கொண்டு, எப்படி திறமை வெளிப்படுத்துகிறீர்கள் என்பதை சோதனை செய்வது தான் கிரிக்கெட்.

அதேபோல சிறந்த அணி, சிறந்த வீரர்கள் என்பவர்கள் எதையும் எளிதாக விட்டுக் கொடுக்கக் கூடாது. சொந்தமண்ணில் வெற்றிகளை குவிக்கும்பெரும்பாலான அணிகள், அந்நிய மண்ணில் மோசமான முறையில் தோற்கின்றன. இதனால் டெஸ்ட் கிரிக்கெட் என்பது கேலிக்குரியது போல ஆகிவிட்டது.

### ஆணவப் போக்கு

இங்கிலாந்தில்எப்படியும் வென்று விடலாம் என்ற மெத்தனத்தில் ஆணவமாக வந்தனர் இந்திய வீரர்கள். ஆனால் உலகின் 'நம்பர் 1' டெஸ்ட் அணியான இந்தியாவின் செயல்பாடு, முதல் இரு டெஸ்டில் மிக மோசமாக இருந்தது. லோர்ட்சில் பந்தின் வேகம் மற்றும் 'சுவிங்' அதிகம் இருந்ததால் விரைவில் வீழ்ந்தனர். துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பற்ற முறையில் விளையாடினர்.







### முட்டாள்தனம்

'அவுட் சுவிங்' பந்துகளை எதிர்கொள்கிறோம் என்ற எவ்வித நினைப்பும் இல்லாமல் விளையாடி, முட்டாள்தனத்தின் எல்லைக்கே சென்று விட்டனர்.

இவர்கள் சொதப்பியது மட்டுமன்றி ரசிகர்களையும் ஏமாற்றி விட்டனர். இதை பார்க்கும்போது இத்தொடருக்காக எந்தளவு மோசமான முறையில் தயாராகி வந்துள்ளனர் எனத் தெரிகிறது. போல்டாவது, 'சிலிப்' பகுதியில் 'பிடி' கொடுப்பது எல்லாம் மூளையற்ற செயல்.

தரமான 'சுவிங்' பந்துவீச்சாளரை இங்கிலாந்து போன்ற சூழ்நிலைகளில் எதிர்கொள்ளும் போது, இது போன்ற அடிப்படை விடயங்களில் கூட தவறுகளை செய்யக் கூடாது.

### தகுதி உள்ளது

காய்ந்த, பந்துகள் எகிறாத, சமதளமான இந்திய ஆடுகளங்களில் எளிதாக ஓட்டங்கள் குவித்து பழக்கப்பட்டவர்கள். இந்தியாவில் புதிய பந்துகள் விரைவில் தேய்ந்து விடும். இதனால் துடுப்பாட்ட வீரர்கள் 'கிங்' ஆக இருப்பர். அதே எண்ணத்துடன் இங்கிலாந்து வந்துள்ளனர். தோல்வி அடையத் தகுதியான அணி தான் இந்தியா. அடுத்த டெஸ்ட் ஈசியாக இருக்கும் என எதிர்பார்க்கக் கூடாது.

ஏனெனில் இங்கு அண்டர்சன் சிறப்பாக செயல்பட்டுள்ளார். ஸ்ருவேர்ட் பிரோட்டின் சொந்த மண் பலமும் இந்தியாவுக்கு கடும் சவால் தருவது உறுதி. இவ்வாறு ஜெப்ரி போய்கொட் கூறினார்.

### பும்ரா தயார்

அயர்லாந்துக்கு (ஜூன் 2018) எதிரான முதல் 'ரி20'இல் பங்கேற்ற, இந்திய வேகப்பந்துவீச்சாளர் பும்ராவின் இடது கையில் காயம் ஏற்பட்டது. இதனால், இங்கிலாந்துக்கு எதிரான 'ரி20' மற்றும் ஒரு நாள் தொடரில் விளையாடவில்லை.

முதலிரண்டு டெஸ்டிலும் பங்கேற்கவில்லை. காயத்திற்காக 'சத்திரசிகிச்சை' செய்து கொண்ட பும்ரா, தற்போது உடற்தகுதி பெற்றுவிட்டார். இருப்பினும், மூன்றாவது டெஸ்டிற்கான 'லெவன்' அணியில் இடம்பிடிப்பது உறுதியாகவில்லை.

இதைப்போல, லோர்ட்ஸ் டெஸ்டில் வலது கையில் பாதிப்பு ஏற்பட்ட அஷ்வின், ஹர்திக் பாண்ட்யாவும் உடற்தகுதி பெற்றுவிட்டனர். முதுகுவலியால் அவதிப்பட்ட அணித் தலைவர் ஹோலி, 'ஜிம்' பயிற்சியில் ஈடுபட்டது நம்பிக்கை அளிக்கிறது.

### ஹோலி உருக்கம்

இந்திய அணித் தலைவர் ஹோலி முகநூலில் வெளியிட்ட செய்தியில்,' சில நேரங்களில் வெற்றி பெறுவோம் அல்லது தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள்வோம். எந்த நிலையிலும், எங்களை ரசிகர்களான நீங்கள் கைவிட வேண்டாம். நாங்களும் எப்போதும் உங்களுக்கு ஆதரவு அளிப்போம்,' என, தெரிவித்துள்ளார்.

# பென் ஸ்ரோக்ஸ் நிம்மதி

## வழக்கிலிருந்து விடுவிப்பு



போதையில் மோதலில் ஈடுபட்ட வழக்கிலிருந்து இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஸ்ரோக்ஸ் விடுவிக்கப்பட்டார்.

இங்கிலாந்து அணி 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸ் (வயது-27). கடந்த 2017 செப்ரெம்பரில் பிரிஸ்டல் நைட் கிளப்பிலிருந்து போதையில் வெளியே வந்தார். பின், இரண்டு நபர்களுடன் சாலையில் மோதலில் ஈடுபட்டு கடுமையாக தாக்கினார்.

இந்த வழக்கு, பிரிஸ்டல் கோர்ட்டில் நடந்து வந்தது. ஸ்ரோக்ஸ் நேரடியாக ஆஜராகி வந்தார். இந்தியாவுக்கு எதிரான லார்ட்ஸ் டெஸ்டில் விளையாடவில்லை.

ஸ்ரோக்ஸ் தரப்பில் வாதாடுகையில்,' நைட் கிளப்பிலிருந்து வெளியே வந்த போது, இரண்டு நபர்கள் ஒருவருக்கு ஒருவர் வார்த்தை மோதலில் ஈடுபட்டனர். இதை விலக்கி வைக்கவே நான் சென்றேன். இவர்கள்என்னை தாக்க முயற்சித்தனர். தற்காத்துக்கொள்ள இருவரையும் தாக்கினேன்,' என, தெரிவிக்கப்பட்டிருந்தது.

இரு தரப்பு வாதங்களையும், கேட்ட நீதிபதிகள்,' தன்னை பாதுகாப்பதற்காகவே ஸ்டோக்ஸ் தாக்கி உள்ளார். இவரை குற்ற மற்றவர் என அறிவிக்கிறோம். இதைப் போல, மற்றைய இருவரும் வழக் கிலிருந்து விடு விக்கப் படுகின்றனர்.' என, தீர்ப்பளித்தனர்.

தீர்ப்பை கேட்டபின், ஸ்ரோக்ஸ் சற்று உற்சாகத்துடன் காணப்பட்டார். இவரது மனைவி மகிழ்ச்சியில் கண்ணீர் சிந்தினார்.

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான (ஓக. 18-22, நொட்டிங்காம்) 13 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆனால், கிரிக்கெட் இங்கிலாந்து ஒழுங்குமுறை ஆணையத்தில் இவரது வழக்கு மீதம் உள்ளது. இதில் சாதமாக வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும்.

# ரி20 இலங்கை வசம்





சண்டகன், அகில தனஞ்செயவின் மந்திர சுழல் பந்து வீச்சு மீண்டும் கைகொடுக்க, தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒரேயொரு ரி20 போட்டியை வெற்றி கொண்ட இலங்கை தொடரை கைப்பற்றி அசத்தியது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட தென்னாபிரிக்க அணி ஒரேயொரு போட்டி கொண்ட ரி20 தொடரில் பங்கேற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸவில் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு டிகொக், அம்லா ஆகியோர் களம் இறங்கினர். அம்லா ஓட்டம் ஏதும் எடுக்காமல் டக்அவுட் ஆனார். அடுத்து வந்த ஹென்ரிக்ஸ் 19, டிகொக் 20 ஓட்டங்கள் எடுத்தனர். டுமினி 3 ஓட்டங்களுடன் வெளியேற கிளாசன் 18, டேவிட் மில்லர் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்தவர்கள் தொடர்ந்து டக்அவுட்டில் வெளியேற தென்னாபிரிக்காவின் கதை 16.4 ஓவர்களில் 98 ஓட்டங்களில் நிறைவுக்கு வந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் சுழற்பந்து வீச்சாளர்களான சண்டகன் 3, தனஞ்செய டி சில்வா 2, அகில தனஞ்செய 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

99 ஓட்டங்கள் என்ற சுண்டங்காய் வெற்றியிலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு பெரேரா 3, மெண்டிஸ் ஒரு ஓட்டத்திலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

அதன்பின் வந்த சண்டிமல் மற்றும் தனஞ்செய டி சில்வா ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். டி சில்வா 26 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்தார். மத்யூஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஷானக 16, திசாரா டக் அவுட்டாக இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்டது.

எனினும் சண்டிமல் நிலைத்து நின்று ஆட இலங்கை 16.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (99 ஓட்.) 3 விக்கெட்டுக்களால் அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலையில் 54 சிறுமிகளை கொன்று குவித்த கொடிய தினம்

## மட்டக்களப்பில் நினைவஞ்சலி



(ஏறாவூர்)

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானப் படை கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி பாடசாலை மாணவிகளை கொன்று குவித்த கொடிய நாள் நேற்றாகும்.

இக்கொடிய தினத்தின் 12 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அதன் மட்டக்களப்பு மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது, பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்கள் வைத்து உயிரிழந்த சிறுமிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மௌனப்பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதன் நினைவாக மட்டக்களப்பு கொடுவாமடுவிலுள்ள முன்பள்ளி பாடசாலையொன்றின் ஆசிரியருக்கு நிதி அன்பளிப்பும் செய்யப்பட்டது.

தமிழரின் நீண்ட சோக வரலாற்றில் கடந்த 2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈவிரக்கமற்ற தாக்குதலில் 54 சிறுமிகள் உட்பட 61 பேர் கொல்லப்பட்டதோடு, 129 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## புதிய வாக்காளர் இடாப்பு மக்கள் பார்வைக்கு மாற்றம் இருப்பின் அறிவிக்கவும் - மொஹமட்

(கொழும்பு)

சீர்திருத்தம் செய்யப்பட்டு வரும் 2018 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தொடர்பிலான முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியல் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் காரியாலயம் என்பவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த புதிய பட்டியலில் உள்ள பெயர் கள் சரியாக இடம்பெற்றுள்ளதா என்பதனை வாக்காளர்கள் பரீட்சிக்க முடியும். பெயர்ப் பட்டியலில் தமது பெயர் இல்லையென்றோ அல்லது அதில் யாருடையவாவது பெயர் விடுபட்டு இருப்பதாகவோ அறிந்தால், அது குறித்து முறைப்பாடு செய்யுமாறும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த புதிய வாக்காளர் இடாப்பை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம் பத்தில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும் விளம்பி வருடம் ஆடி 3 ஆம் நாள் (19.07.2018) வியாழக்கிழமை அன்று ஸப்தமி திதியில் அமரத்துவம் அடைந்த எமது பாசமிகு தந்தையார்

**அமரர் திருA.K. மகாலிங்கம்**

**அவர்களின்**

சிவபத பேறு குறித்த 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 16.08.2018 வியாழக்கிழமை யாழ். கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையில் கரையில் இடம்பெற்று 18.08.2018 சனிக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்களும் குடும்பச சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை.** **077 056 4121** **இங்ஙனம் குடும்பத்தினர்.**

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம்- 2018
## நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை

1."தலைவர், பெறுகைக்குழு, வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்" அவர்களால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.

2.தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்குஅமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.

3.பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 04/2016 (i) இற்கமைவாக வட மாகாண எல்லைக்குள் பதிவுகளைக் கொண்டவராகவும், அட்டவணையில் காட்டிய படி பொருத்தமான தரத்தில் CIDA பதிவுள்ளவராகவும்,கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.தேவையானதகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை (தொலைபேசி இல: -021-226 3973) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 29.08.2018ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை எனும் இடத்திலிருந்து 15.08.2018ஆம் திகதியிலிருந்து 29.08.2018 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

7.பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றை 29.08.2018 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு "தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்து மூன்று - 31.10.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரிகள் நீங்கலாக மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| NP/14/41 (4)/2/4/C F/18/13 | கட்டைக்காடு (காமாலை) ஒழுங்கை | 1.035 | 2 மாதங்கள் | C9 | 11,000.00 |
| NP/14/41 (4)/2/4/C F/18/14 | மோரியன்குள ஞானவைரவர் வீதி | 0.955 | 2 மாதங்கள் | C9 | 10,000.00 |

10.கேள்விகள் தொடர்பானமுன்னோடிக் கூட்டம் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் 21.08.2018 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்குநடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தங்களது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

தலைவர், உள்ளூராட்சிமன்றபெறுகைக்குழு,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.
15.08.2018.

(சி-3506)

## இராசி பலன்

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமைப் படுவீர்கள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, விரயங்கள் கூடும்.

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்
பூரட்டாதி, உத்திரட்டாதி

சூரி, புத, ராகு
கேது, செவ்,
சனி
குரு
சுக், சந்

15.08.2018
ஆடி 30, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 8.29 மணிவரை
அத்தம் முன்னிரவு 9.55 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
கருட பஞ்சமி

வளவன்

**மகரம்:** போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** ஒருசில வேலைகளுக்காக சற்று அலையும் நிலை ஏற்படலாம், தொழிலில் கூடுதல் கவனம் தேவை, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் நினைவேந்தல்



செஞ்சோலை படுகொலை 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (படங்கள்:-பொ.சோபிகா)

## "நிழல்கள்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அ.யேசுராசாவின் "நிழல்கள்" நூல் வெளியீடு குருநகர் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள கார் மேல் மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் மருத்துவர் எம்.கே.முருகானந்தன் தலைமையில்இடம்பெறவுள்ளது. இதில் அறிமுகஉரையை ஜோன்சன் ராஜ்குமாரும் மதிப்பீட்டுரையை சி.சித்திராதரன், கலாநிதி சி.ரகுராம் ஆகியோர் வழங்குவர். (இ

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ ஆரம்பதினமாக 16.08.2018 முதல் 11.09.2018 வைரவர் மடை வரையான காலப்பகுதி வரை புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளது.

ஆலயத்தின் பின் வீதியிலமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் தினசரி மாலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறும். தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது மட்டும் காலை 7 மணிமுதல் இரவு 8 மணி வரை முழுநேரமாகத் திறக்கப்பட்டிருக்கும்.

சிறுவர்கள், பெரியவர்கள் என அனைத்துத் தரப்பினருக்குமான ஆன்மீகம், தியானம், யோகாசனம், ஆளுமை வளர்ச்சி, ஆன்மீகக் கதைகள் உள்ளடங்கிய நூல்களும் திருக்கைலாயம், தெய்வத் திருமூலர், சுவாமி விவேகானந்தர் படங்களும் தேவாரம், பஜனைப்பாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்களும் விற்பனைக்கு வைக்கப்படும். ஆன்மீக ஆர்வலர்கள், பக்தர்கள் அனைவரையும் வந்து பார்வையிட்டு பயன் பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ

## இரத்த சுத்திகரிப்பு நிலையம் சாவகச்சேரியில் நாளை திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இரத்த சுத்திகரிப்பு நிலையம் நாளை 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.வருகை தரவுள்ள சுகாதார அமைச்சர் ராஜித சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதனின் விசேட அழைப்பின் பேரில் இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு நிலையத்திற்கான இயந்திரங்கள் பொருத்தும் பணிகள் நிறைவடைந்திருப்பதுடன் நாளை வியாழக்கிழமையிலிருந்து இயங்க ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான வைத்தியர், தாதியர் உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறைகளும் சிறிது சிறிதாக நிரப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## சரஸ்வதி சனசமூக நிலையத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நிலையத்தலைவர் க.அருந்தவராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷன் கலந்து கொள்வார். (இ-7)

## மணல் கடத்தியவர் கைது உழவு இயந்திரமும் பறிமுதல்

(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து ஏற்றிவந்த உழவு இயந்திரம் ஒன்றை பறிமுதல் செய்ததுடன் சாரதியையும் கைது செய்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தப்படுவதாக குடத்தனையிலுள்ள விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு விரைந்த அதிரடிப் படையினர் உழவு இயந்திரத்தை பறிமுதல் செய்ததுடன் துன்னாலையைச் சேர்ந்த சாரதியையும்கைது செய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (இ-60)

## பொதுக் கிணற்றடிக்கு மின்குமிழ் பொருத்துக

## பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதி 1ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றடிக்கு மின்குமிழ் பொருத்தித் தருமாறு பொதுமக்கள் சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.


குறித்த பொதுக் கிணற்றினை 15இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாவித்து வருவதாகவும் இரவு மற்றும் அதிகாலை வேளைகளிலே அதிகமாகப் பயன்படுத்தி வருவதாகவும் எனவே வெளிச்ச வசதி ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு பிரதேசத்தில் மூன்று நகரசபை உறுப்பினர்கள் காணப்படுகின்றபோதிலும் இதுவரை தமக்கு வாக்களித்த மக்களுக்கு ஒரு தெரு விளக்காவது பொருத்த வழியற்றவர்களாக காணப்படுவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-30)



யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த 10ஆம் திகதி சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான 500 ஆவது இரத்த சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதில் வைத்திய நிபுணர் அ.ரகுபதி, கி.சிவ ராமன் தலைமையிலான மருத்துவக் குழுவினருடன் வைத்திய அத்தியட்சகர் யோ.திவாகர், வைத்தியசாலை தாதிய பரிபாலகர் மற்றும் தாதியர்கள் கலந்து கொண்டனர்.

## மின்பிறப்பாக்கி பொருத்தல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர் ) ஒன்றினை வடக்கு மாகாண சபையிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது காணப்படுகின்ற மின் பிறப்பாக்கியின் வலு போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக மின்சாரம் தடைப்படும் நேரத்தில் கதிர் (X-Ray) படங்களை எடுக்க முடியாமல் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் பெரும் சிரமத்தினை எதிர் கொண்டிருந்தனர்.

நோயாளிகளின் சிரமத்தை போக்கும் நோக்கில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் மாகாணசபையிடமிருந்து 100 வோல்ற் வலுவுடைய மின்பிறப்பாக்கி ஒன்றினை தனது தீவிர முயற்சியின் பயனாக பெற்றுக் கொண்டுள்ளார்.

மின்பிறப்பாக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ளது. அதிக வலுவுடைய மின்பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றிருப்பதால் மின்சாரம் தடைப்படும் நேரத்தில் எந்தவித தடைகளும் இன்றி வழமை போல் சேவையாற்ற முடியும். (இ-30)



தேசிய சமாதானப் பேரவையின் அனுசரனையுடன் சொண்ட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கையில் நிலைமாறு நீதி" விடயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு சம்பந்தமான கருத்தரங்கு நேற்று முன்தினம் 13.08.2018 யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்து பயிற்சி பெற்றனர்.



"சுத்தமான கடற்கரை" என்னும் தொனிப் பொருளில் சிரமதானப் பணிகள் நாவற்குழி தெற்கு கடற்கரைப் பகுதியில் யாழ்ப்பாண றோட்டறக்ட் கழகம் மற்றும் நாவற்குழி தெற்கு பொது அமைப்புக்களும் இணைந்து சிரமதானப் பணியினை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் அச்சிடப்படும் இலங்கை நாணயத்தாள்கள்

## இந்தியாவில் பெரும் பரபரப்பு

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் நாணயத் தாள்களை சீனாவே அச்சிடுவதாக சவுத் சைனா மோர்னிங் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏனையநாடுகளின்பொருளாதாரங்களில் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் வகையில், பாரியளவில் வெளிநாட்டு நாணயத்தாள்களை சீனா அச்சிடுகிறது.

சீனாவிலுள்ள நாணயத்தாள் அச்சிடும் தொழிற்சாலைகள் முழு அள்வில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அண்மைக்காலம் வரை சீனா வெளிநாட்டு நாணயத் தாள்களை அச்சிடவில்லை என்று சீனாவின் வங்கி நாணயத்தாள்கள் அச்சிடும் நிறுவனத்தின் தலைவரான லியூ கியூ ஷேங், தெரிவித்துள்ளார்.

இதேவேளை அணை மற்றும் பாதைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், நேபாள நாணயத் தாள்களை சீனா அச்சிட ஆரம்பித்தது என்று சைனா பினான்ஸ் இதழில் லியூ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பின்னர், தாய்லாந்து, பங்களாதேஷ், இலங்கை, மலேசியா, இந்தியா, பிரேசில், போலந்து உள்ளிட்ட நாடுகளின் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு நேபாளம், 1000 ரூபா மதிப்புள்ள 200 மில்லியன் நாணயத் தாள்களை அச்சிடும் பணியை சீன நிறுவனத்திடம் வழங்கியது. கடந்த ஆண்டு முதல் நாணயத்தாள்கள் நேபாளத்துக்கு வழங்கப்பட்டன.

சீனாவில் நாணயத் தாள்களை அச்சிடும் செலவு குறைவானது என்றுநேபாள ராஷ்ட்ரா வங்கியின் பணிப்பாளர் புகுபன் கடெல் தெரிவித்தார்.

இன்னொரு நாட்டில் முன்னர் அச்சிடப்பட்டதை விட தரம் நன்றாக இருக்கிறது.

இதற்காக முன்னர் கொடுத்த தொகையை விட பாதியே செலவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தியாவின் நாணயத் தாள்கள் சீனாவில் அச்சிடப்படுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில், இந்திய மத்திய நிதி அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய நாணயத் தாள்கள் சீனாவிடம் அச்சிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்திய நாணயத் தாள்களை அச்சிடும் வேலை சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றது என்று இந்திய நிதியமைச்சின் பொருளாதார விவகார திணைக்களத்தின் செயலர் சுபாஸ் சந்திர கார்க் தெரிவித்துள்ளார்.

இந்திய நாணயத் தாள்கள் இந்திய அரசாங்கத்தினால், ரிசேவ் வங்கியின் அச்சகங்களிலேயே அச்சிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


## அற்றோனி தத்துவ பத்திரத்தை இரத்துச்செய்தல் இத்தால் சகலருமறிய!

சாவகச்சேரி வடக்கு தற்போது கனடாவில் வசிக்கும் செல்லத்தம்பி பாலேந்திரகுமாரும் பாலேந்திரகுமார் அஜந்தினியும் ஆகிய தாங்கள் எங்களுக்குச் சொந்தமான சாவகச்சேரி வடக்கு மடத்தடியில் அமைந்துள்ள "கரடிக்குழி" எனும் ஆதனத்தை பராமரிக்கவும் அது தொடர்பிலான சில கருமங்களை ஆற்றுவதற்குமாக மட்டுப்படுத்தப்பட்ட அற்றோனி தத்துவத்தை சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேர்ந்த நடராசா இராசேந்திரம் என்பவருக்கு வழங்கியிருந்தோம் என்றும் தற்போது குறித்த அற்றோனி தத்துவப் பத்திரம் எங்களால் இரத்துச் செய்யப்படுகின்றதென்றும் அறிவிக்கின்றோம்.

குறித்த நடராசா இராசேந்திரம் என்பவர் இனி மேல் எமது அற்றோனி தத்துவக்காரரர் அல்ல என்றும் எம் சார்பாக அவரால் செய்யப்படும் எக்கருமங்களுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்ல என்றும் வெளிப்படுத்தி அறிவித்தல் விடுக்கின்றோம்.

செல்லத்தம்பி பாலேந்திரகுமார்
பாலேந்திரகுமார் அஜந்தினி

(5362)



VD
V CHILLI POWDER
மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி தயாரித்துக் கொடுக்கப்படும்.

Home Delivery Available

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

V Darling Sweets
TP No:- 077 944 7977, 077 508 4685



"வேலுண்டு வினை தீர்க்க! மயிலுண்டு பயமில்லை!!"

நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவம்-2018
யாழ்ப்பாணம்



வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!

"மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணி சிவனருள் பாலா பரவரமுரள பரமதயாளா"
[சிவயோக சுவாமிகள்]

அன்புடையீர்!

யாழ்.நகரில் புகழ்பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் 16.08.2018 நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாட்களும் அன்னதானமும் விடியற் காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அன்னதானத்தில் பங்குபற்றிய சகல அடியார்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்கள் பேருதவிக்கு நல்லைக் கந்தன் அருள்புரிவானாக.

☆ அன்னதானத்துக்கு தேவையான பொருட்களை தந்துதவலாம்.

(5343)

செ.சோமாஸ்கந்தன், மூத்ததம்பி அன்னதான மடம்,
139, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். TP:- 075 673 1327



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா:24 உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc/ QS/அபுதாபி
தொ.இ: B/237

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 13
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:கனடா PR
தொ.இ: B/242

பிறுப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 20சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:பட்டதாரி/ அவுஸ்திரேலியா
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/251

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 22
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/261

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 85செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSc/லண்டன் NOT PR
தொ.இ: G/447

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 16செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/463

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/468

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 4
உயரம்: 5'
தகைமை/தொழில்:BBA/அரசதொழில்
தொ.இ: G/475

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி இலங்கை விமானப்படையின் விமானங்கள் சிறுமிகள் பராமரிப்பு நிலையத்தின் மீது நடத்திய குண்டுத் தாக்குதலில் 54 பாடசாலை மாணவிகள், 4 ஊழியர்கள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தத்தாக்குதலின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் தினம் நேற்று வல்லிபுனத்தில் நினைவுகூரப்பட்டது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உட்பட பல பிரதேசங்களிலும் நினைவு மண்டபங்கள் அமைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கை வான் படையால் குண்டு வீசித் தாக்கப்பட்ட அப்பாவி மாணவிகளில், பெரும்பாலானவர்கள் 15-18 வயதுக்குட்பட்ட மாணவிகளேயாவர். அவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவிகளில் பெரும்பாலானவர்கள் க.பொ.த. (உ/த) கற்கும் மாணவிகள். இவர்கள் உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறிக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலய பாடசாலைகளில் இருந்து தலைமைத்துவ தகைமைக்கு தெரிவு செய்யப்பட்டு செஞ்சோலையில் கூடியிருந்தனர்.

அவ்வாறு கூடியிருந்த 400 மாணவிகளில் ஒரு பகுதியினரே காலைவேளை விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டனர்.. இப்புயிற்சிநெறி ஓகஸ்ட் 11, 2006 இலிருந்து 20 ஓகஸ்ட், 2006 வரை நடைபெறுவதாக இருந்தது.

இப்பயிற்சி நெறி "கிளிநொச்சி கல்வி வலயத்தால்" ஒழுங்கமைக்கப்பட்டு, பெண்கள் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் (CWRD)" நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு படுகொலைக்கு பல சர்வதேச அமைப்புக்களும் கண்டனம் வெளியிட்டிருந்தவேளை,

இலங்கை அரச பேச்சாளராக இருந்த ஹெகலிய ரம்புக்வெல தாக்கப்பட்ட இடம் புலிகளின் தளம் என்றும், அதில் சிறுவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் புலிகளால் பலவந்தமாக சேர்க்கப்பட்ட குழந்தைப் போராளிகள் என்றும் கூறியிருந்தார்.

எனினும் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட நடுநிலை அமைப்புக்களான ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவி மாணவர்களே என்பதை உறுதிசெய்தன.

ஆனாலும் அங்கு சென்று பார்வையிட்ட நடுநிலை அமைப்புகள் போர் அனுபவம் அற்றவர்கள் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (2-281)

## மீனவர்களின் வாடிகளுக்கு தீ வைப்பு

# இனிவரும் நாட்களில் இடம்பெறாது தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்து





(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறுப்பகுதியில் தமிழ் மீனவர்களின் வாடிகள் மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நேற்று முன்தினம் இரவு எரிக்கப்பட்டதற்கு உரிய நீதி கிடைக்கவேண்டுமெனவும் இதுபோன்ற சம்பவங்கள் இனிவரும் நாட்களில் இடம்பெறாமல் தடுப்பதற்குரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் பூர்வீகமாகத் தொழில் செய்து வந்த ஒன்பது தமிழ் குடும்பங்களின் எட்டு வாடிகளுக்கு நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

அங்கு வைக்கப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் முற்றாக அழிந்து நாசமாகியுள்ளன.

இந்நிலையில் நேற்றுக் காலை சம்பவ இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், ஆகியோர் நிலைமைகள் தொடர்பில்பார்வையிட்டதுடன், மீனவர்களுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை நேற்றுக்காலை பொலிஸார் பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர், வெளி மாவட்டத்திலிருந்து வருகின்ற மீனவர்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதத் தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இங்குள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் இவற்றைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியின் பயனாக அண்மையில் கடற்றொழில் அமைச்சர் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து இதனை தடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தார்.

இதன் எதிரொளியாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. இது போன்ற சம்பவங்கள் இனிவரும் நாட்களில் இடம்பெறாத வண்ணம் இருப்பதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# மனித எலும்புகள் அகழ்வு மன்னாரில் இடை நிறுத்தம்

## மீண்டும் 20 ஆம் திகதி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் "சதொச" வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த மனித எலும்புக் கூடுகள் அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் வரை குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றது.

தற்போது வரை 52 நாட்கள் அகழ்வுப்பணிகள் இடம்பெற்றுள்ளதோடு 72 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருந்தது.

அவற்றில் 56 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன .

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை(13) முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அகழ்வு பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அகழ்வு பணிகள் எதற்காக இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பில் காரணம் தெரிவிக்கப்படவில்லை.

குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (2)

# பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்

## கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் செல்வராணி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் செல்வராணி பிரேரணை ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

கரைச்சி பிரதேச சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆறாவது அமர்வின் போதே அவர் இப்பிரேரணையை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். சட்டவிரோத மதுபான உற்பத்தி, தொழில் வாய்ப்பின்மை போன்றவற்றாலும் ஏனைய காரணிகளாலும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாள்வதற்கு விசேட அலகொன்றை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பெண்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு பொதுச் சந்தையில் இடம் ஒன்றினையும் ஒதுக்கீடு செய்து தருவதோடு, புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கு பிரத்தியேகமாக அறை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்.

இதனை கரைச்சிப் பிரதேச சபை ஏற்றுக்கொண்டதோடு, ஏற்கனவே காணப்படுகின்ற நான்கு குழுக்களுக்கு மேலதிகமாக ஐந்தாவது குழு ஒன்றையும் உருவாக்கி பெண்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-312-281)

# ஆட்டோவில் கஞ்சாவுடன் சென்ற நபர் தப்பியோட்டம் ; சாரதி கைது

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் நொச்சி மோட்டை பாலத்தில் கடந்த 12 ஆம் திகதி இரவு பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது ஆட்டோ ஒன்றில் போதைப் பொருளைக்கொண்டு சென்ற நபர் ஒருவர் போதைப் பொருளை கைவிட்டு தப்பி ஓடியுள்ளார். இதையடுத்து ஆட்டோ சாரதியைக் கைது செய்த பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 12 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கள்ளிக்குளத்திலிருந்து நபர் ஒருவருடன் வவுனியாவிற்கு வாடகைக்கு ஆட்டோ ஒன்றில் சென்றபோது நொச்சி மோட்டை பாலத்தில் பொலிஸாரின் வழமையான சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. அதில் பயணித்த நபர் ஒருவர் இறங்கி வெளியே காத்திருந்துள்ளார். ஆட்டோ சாரதியுடன் சோதனை மேற்கொண்ட பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட சிறிய கஞ்சாப் பொதிகள் சிலவற்றை கைப்பற்றியுள்ளனர்.

வெளியே காத்திருந்த நபர் போதைப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியதையடுத்து அங்கிருந்து தப்பி ஓடிச் சென்றுள்ளார்.

இதையடுத்து ஆட்டோச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று குறித்த நபர் மீது விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் நேற்று முன்தினம் பிற்பகல் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

10ஆயிரம் பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதுடன் எதிர்வரும் 18.09.2018 இற்கு மீளவும் வழக்கு விசாரணைக்கு திகதியிடப்பட்டுள்ளது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நிரப்பப்படாத நிலையில் ஆளணி வெற்றிடங்கள்

## பிரதேச செயலாளர் ரஞ்சனா தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தைகிழக்கு பிரதேச செயலகத்தில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் 45 வீதமான ஆளணிகளை வைத்துக்கொண்டே சேவைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் என்.ரஞ்சனா தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்நேற்று முன்தினம் நடைபெற்ற போது, மேற்படி பிரதேச செயலாளர் இவ்விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் ஆளணி வெற்றிடங்கள் இதுவரை முழுமைப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக, பிரதேச செயலாளர் தவிர்ந்த உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், உதவித் திட்டப்பணிப்பாளர், கணக்காளர் ஆகிய முக்கிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் பிரதேச செயலாளர் மாவட்டச்செயலகத்திற்கோ அல்லது வெளியிடங்களுக்குச் சென்றாலோ மக்கள் எந்த சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. பிரதேச செயலர் வரும் வரை காத்திருந்து சேவையைப் பெறவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில கருத்துத்தெரிவித்த மாந்தை கிழக்குப்பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் கீழ் பல்வேறு தேவைப் பாடுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, பொது விளையாட்டு மைதானம், கலாசார மண்டபம் போன்ற தேவைப் பாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தனிநபர் கொண்ட குடும்பங்களுக்கான உதவித்திட்டம் என்பது கிடைக்கப்பெறவில்லை. குறிப்பாக, வீட்டுத்திட்டம், வாழ்வாதார உதவி போன்ற திட்டங்களுக்குள் உள்வாங்கப்படுவதில்லை. அவர்களையும் ஏதாவது திட்டத்தில் உள்வாங்கி அவர்களுக்கு உதவிகள் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் எனவும் தெரிவித்த அவர், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் கூடுதலான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

குறிப்பாக, உதவிப்பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் இருக்கின்ற 45 வீதமான ஆளணிகளை வைத்துக்கொண்டே கடமைகளை செய்யவேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# மடு திருத்தல திருவிழா இன்று

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாத திருவிழா இன்று புதன் கிழமை காலை 6.30 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

மடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாத திருவிழா கடந்த 6 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அதனைத்தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம் பெற்று வந்தன.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்று திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் நிறைவடையவுள்ளது.

மடு திருத்தலத்திற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இம்முறை சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், குழநீர், உணவு, தங்குமிடம், மின்சாரம், உள்ளிட்ட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# துணுக்காய் பிரதேசத்தில் புதிய வீடுகள் 720 குடும்பங்களுக்கு தேவையாகவுள்ளன

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் 720 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் தேவைப்படுவதாக பிரதேச செயலகப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு தேவைப் பாடுகள் காணப்படுகின்றதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, 720 குடும்பங்களுக்கு புதிய வீடுகள், 25 குடும்பங்களுக்கு தனிநபர் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

இதைவிட 24 வணக்கஸ்தலங்கள், இரண்டு முன்பள்ளிகள் என்பன புனரமைக்கப்பட வேண்டும் என்றும் மூன்று சிறிய நீர்ப்பாசனக்குளங்களும் புனரமைக்கவேண்டிய தேவை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# 3ஆயிரத்து 83 குடும்பங்கள் மாந்தை கிழக்கில் மீள்குடியேற்றம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 3 ஆயிரத்துக்கு 83 குடும்பங்களைச்சேர்ந்த 9 ஆயிரத்து 551 பேர் மீள் குடியேறியுள்ளதாக பிரதேச செயலகப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மூவாயிரத்து 83 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 551 பேர் இதுவரை மீள்குடியேறியுள்ளதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, வன்னிவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 155 குடும்பங்களும் அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் 292 குடும்பங்களும் கொல்லவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 193 குடும்பங்களும் ஒட்டறுத்தகுளம் கிராம அலுவலர் பிரிவில் 216 குடும்பங்களும் சிவபுரம் கிராம அலுவலர் பிரிவில் 128 குடும்பங்களும் பாலிநகர் கிராம அலுவலர் பிரிவில் 482 குடும்பங்களும் கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் 188 குடும்பங்களும் பூவரசன்குளம் கிராம அலுவலர் பிரிவில் 150 குடும்பங்களும் பாண்டியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் 365 குடும்பங்களும் செல்வபுரம் கிராம அலுவலர் பிரிவில் 264 குடும்பங்களும் மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் 196 குடும்பங்களும் விநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவில் 140 குடும்பங்களும் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 184 குடும்பங்களும் பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் 61 குடும்பங்களும் சிறாட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 69 குடும்பங்களும் என மொத்தம் மூவாயிரத்து 83 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. (2-315)

# நாயாற்றில் வாடிக்கு தீ; மூவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தமிழ் மீனவர்களின் படகுகள்,வலைகள்,வாடிகள் என்பன எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதாகிய சந்தேக நபர்கள் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இதே வேளை முல்லைத்தீவு கடற்பரப்பில் அனுமதியின்றி கடற்றொழிலில் ஈடுபட்ட 8 படகுகளுடன் 27 வெளிமாவட்ட மீனவர்களை கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (2-281)

# இரண்டாம் மொழிக் கற்கையை நிறைவு செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள்



(பரந்தன்)

இரண்டாம் மொழி கற்கையை பூர்த்தி செய்த 60 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தில் இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்த 60 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மாவட்டச் செயலகங்களைச் சேர்ந்த 30 உத் தியோகத்தர்கள் என மொத்தம் 60 பேர் தொடர்ச்சியாக பன்னிரண்டு நாட்கள் இக் கற்கைநெறியை பயின்றுள்ளனர். தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியையும் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியையும் பயின்றுள்ளனர்.

இரண்டாம் மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட பாடநெறிக்கு அமைவாக தொடர்ச்சியாக பன்னிரண்டு நாட்கள் இரண்டாம் மொழிப் கற்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் தொடர்ச்சியாக இக் கற்கைநெறி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தில் இடம் பெறும்.

அரச உத்தியோகத்தர்கள் தங்களது திணைக்களங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் ஆரணி, தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2-312)

# கால்நடைச்சங்கங்கள் உரிய முறையில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கால்நடைச்சங்கங்களை உரிய முறையில் செயற்பட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 60 வீதமான மக்களின் பிரதான தொழிலாக கால்நடைவளர்ப்பு காணப்படுகின்ற போதும் மாவட்டத்தில் தினமும் உற்பத்தி செய்யப்படும் பாலை சந்தைப் படுத்துவதிலும் பாலுக்கு உரிய விலை கிடைக்காமலும் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் பொது அமைப்புக்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டத்திலே கிடைக்கப்பெறும் பாலை முடிவுப் பொருளாக்க கூடிய பால் பதனிடும் நிலையம் மற்றும் பாற்பொருள் உற்பத்தி நிலையம் என்பன கடந்த காலங்களிலே இயங்கியதுடன் அதன் மூலம் பாலுக்கான நிர்ணய விலையும் தொழில் வாய்ப்பு ... பாலுக்கான விலையை வெளியிடங்களில் இருந்து வருகின்ற தனியார் கம்பனிகள் தீர்மானிக்கின்ற நிலைமையும் பாலை சந்தைப்படுத்த முடியாமல் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

எனவே இங்குள்ள கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் பலமான அமைப்பாக செயற்படுவதன் மூலம் பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என மேற்படி அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் நியமனம் தொடர்பாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லா பட்டதாரிகள் நேற்று முன்தினம் யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது,

ஏற்கனவே அரச நியமனங்களில் இருப்பவர்கள் பட்டதாரி பயிலுநர் நியமனத்திற்கு உள்வாங்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்ட நிலையில் நேர்முகத் தேர்வில் தாம் வேலையற்ற பட்டதாரிகள் என சமாதான நீதவான்; கிராம உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்திய கடிதங்கள் நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆயினும் ஏற்கனவே அரச நியமனத்தில் இருப்பவர்கள் பட்டதாரிகள் பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

வடமாகாணத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையினால் குறிப்பிட்ட சிலரின் கல்விச் சான்றிதழ்கள் இழக்கப்பட்டமையினாலும் நேர்முகத் தேர்விற்கு சமர்ப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளித் திட்டங்கள் வழங்கப்பட்டு அதனூடாக நியமனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டமை வேலையில்லாப் பட்டதாரிகள் ஆகிய எமக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் இருந்து வெளியேறி சுமார் 6 வருடங்களாக வேலையில்லாமல் இருக்கின்றோம். பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய ஆண்டு அடிப்படையிலேயே பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுவது வழமை. ஆனால் தற்பொழுது புள்ளித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நியமனங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறது.

அரச ஊடகங்களில் நியமனங்கள் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியிடப்படுவதனால் உறுதியான தகவல்களை அறிய முடியாத நிலையில் பட்டதாரிகள் ஆகிய நாங்கள் பாரிய குழப்ப நிலைக்கு ஆளாகியுள்ளோம்.

நியாயமான முறையில் புள்ளித் திட்டங்கள் வழங்கப்படாமையினாலும் ஒவ்வொரு நேர்முகத் தேர்வு அமர்வினாலும் ஒவ்வொரு விதமான புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக குறிப்பிட்ட சில சான்றிதழ்களுக்கு சில அமர்வில் புள்ளிகள் வழங்கப்பட்டும் சில அமர்வில் புள்ளிகள் வழங்கப்படவில்லை.

உள்வாரி, வெளிவாரி பட்டதாரிகளை பாகுபாடின்றி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட போதிலும் நியமனங்களில் வெளிவாரி பட்டதாரிகளை பாகுபாட்டுடன் பார்த்துள்ளார்கள். பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் புறக்காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

எனவே வேலையில்லாப் பட்டதாரிகள் ஆகிய நாங்கள் பட்டதாரிகள் நியமனங்களில் ஏற்பட்டுள்ள குழறுபடிகள் காரணமாக மிக மிக மன வேதனைகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோம். ஆகையினால் எமது மேற்குறித்த கோரிக்கைகளை கருத்திற் கொண்டு எமக்கான தீர்வினை காலம் தாழ்த்தாது மிக விரைவாக பெற்றுத் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# கிளிமஞ்சரோவில் காதலியுடன் ரோஹித மகிழ்ச்சியில் நாமல்



Namal Rajapaksa
@RajapaksaNamal

Thanks heaps @Rohitha_Chichi & @Tatyanalee94 -drag me all the way from Tangalle to #kilimanjaro for this 9 years in the making & you're still my favourite couple. Nothing but love & blessings for you both on your new adventure. Definitely my happiest moment this year

(கொழும்பு)

ஆபிரிக்காவின் மிக உயரமான மலைச்சிகரமான தன்சானியாவிலுள்ள கிளிமஞ்சரோ மலை உச்சிக்கு நாமல் ராஜபக்ஷ, ரோஹித ராஜபக்ஷ மற்றும் அவரது காதலி டட்யனா லீ ஆகியோர் சென்றுள்ளனர்.

இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

அதில் இந்த வருடத்தின் இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம் என தனது மகிழ்ச்சியை பதிவிட்டுள்ளார்.

மேலும் ஒன்பது வருட தொடர் முயற்சியின் பின்னர் தங்காலையில் இருந்து கிளிமஞ்சரோவுக்கு வந்துள்ளதால் ரோஹித ராஜபக்ஷவுக்கும், டட்யனா லீக்கும் எனது நன்றிகள்.

நீங்கள் எனக்கு மிகவும் விருப்பமான ஜோடிகள். உங்கள் இருவரின் வெற்றிக்கு அன்பும், ஆசீர்வாதமும் என்றும் இருக்கும்.

நிச்சயமாக இந்தத் தருணமே இந்த வருடத்தில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம்" எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ரோஹித மற்றும் அவரது காதலியுடன் நாமல் எடுத்த புகைப்படத்தையும் ரோஹிதவின் காதலியுடன் ரோஹித இருக்கும் புகைப்படத்தையும் நாமல் பதிவிட்டுள்ளார். (இ-7)

# நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து



(சிலாபம்)

சிலாபம் - புத்தளம் பிரதான வீதியின் தெதுரு ஓய பாலத்திற்கு அருகில் 4 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரு பேருந்துகள் மற்றும் இரு மோட்டார் வாகனங்களே இவ்வாறு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆயுளைக் கூட்டும் இஞ்சி





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name-**
**Zingiber officinale**
**Family-**
**Zingiberaceae**
**Engl-Ginger**
**Sing-Inguru**

இஞ்சியானது பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். பல்லாண்டு வாழும் செடியாயினும் ஓராண்டில் இஞ்சிக்கிழங்கு முற்றிவிடுவதால் தரையின் மேல் வரும் தண்டும் இலைகளும் காய்ந்து விடும். ஆகவே இது ஓராண்டுச் செடியாகும்.

இஞ்சி ஒரு கற்பமருந்து. இது கண்களுக்கு நலத்தைப் பயக்கும். கபக் குற்றத்தை போக்கும்.

இருந்தே னலங்கார
மெய்தயின்று மீறி
யிருந்தே னலங்கார
மெய்தி- இருந்தேன்
நீவி ரகசியமா நெண்மா
வுடன் கலந்து
நீவி ரகசியமா நெய்

தேனில் இஞ்சியை கீற்றுக் கீற்றாக கீறிட்டு அது நன்றாக ஊறிய பின் கல்ப முறையுடன் உண்ணுதல் நல்லது. அங்ஙனம் உண்டால் நரை, திரை, மூப்புக்களற்று வாழலாம். இஞ்சியை தோல் நீக்கி பக்குவப்படுத்தி தேனில் ஊற வைத்து தினந்தோறும் கல்ப முறைப்படி உட்கொண்டால் நரை, திரை, மூப்பு இன்றி நீண்ட நாள் இருப்பதுடன் தேகமும் அழகு பெறும். மனோபலம் உண்டாகும்.

**பத்திய உணவு**

நெற்பொரிமாவுடன் பசுவின் நெய் சமன் கலந்து ஆகாரத்திற்குப்பதிலாக உண்ண வேண்டும்.

இஞ்சியை மேற்றோலை நீக்கியபின்பு கல்சியம் சல்பேற் அல்லது கல்சியம் காபனேற் இடப்பட்டு உலர்ந்த பின் கிடைப்பது சுக்கு அல்லது வேர்க்கொம்பு எனப்படும். இஞ்சி, சுக்கு இரண்டுமே மருத்துவ குண மிக்கவை.

இஞ்சியைத் தோல் நீக்கி சீவி இடித்துச் சாறு பிழிந்து 750 மில்லி அளவு எடுத்து 500 கிராம் சீனியை சிறிது நீரில் கலந்து அதில் மேற்கண்ட இஞ்சிச் சாற்றை கலந்து அடுப்பில் வைத்து சர்பத் அல்லது பாகுபதமாகக் காய்ச்சி எடுக்க வேண்டும். அதில் ஒரு தேக்கரண்டி அளவு குழந்தைகட்கும் மூன்று தேக்கரண்டி அளவு பெரியவர்கட்கும் கொடுக்க ஜீரணசக்தி, பசி ஏற்படும். வாய்வு கலையும்.

இதே போல் சீனிக்கு பதிலாக பனை வெல்லம் எனும் கருப்பட்டியைச் சேர்த்து அல்வா போல கிண்டி எடுத்து ஆறியதும் வில்லைகளாக நறுக்கி வைத்துக் கொண்டு பயன்படுத்தினாலும் மேற்கூறிய பயன்களைத் தரும்.

இஞ்சியைத் தோல் சீவி பசுப்பால் விட்டரைத்து 2 கிராம் அளவு 8 மில்லி பசுவின் பாலில் (காய்ச்சி) கலந்துண்ண வயிற்றுப் புண், குடல் அழற்சி, வாய்வு குணமாகும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் இஞ்சிச்சாறு 5 மில்லி அருந்த நாவறட்சி, உடல் களைப்பு நீங்கும்.

இஞ்சியைத் தோல் நீக்கி வாயில் போட்டு மென்று உமிழ் நீரைத் துப்ப தொண்டைப்புண், குரற் கம்மல் இவைகள் குணமாகும்.

செரியாக் கழிச்சலுக்கு இஞ்சிச்சாற்றை தொப்புளைச் சுற்றித் தடவலாம்.

இஞ்சிச்சாறு 10 மில்லி, வெங்காயச்சாறு 10 மில்லி, கலந்துண்ண வாந்தி, ஓங்காளம் நீங்கும்.

இஞ்சிச் சாறு ஒரு தேக்கரண்டி, ஈரவெங்காயச்சாறு ஒரு மேசைக்கரண்டி, எலுமிச்சை சாறு ஒரு மேசைக்கரண்டி இம்மூன்றையும் கலந்து காலை, மாலை மூன்று நாட்கள் அருந்த ஆஸ்மா குணமாகும்.

இஞ்சியை தோல்நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்புடன் கலந்து ஊறப் போட வேண்டும். நாள்தோறும் குலுக்கி, குலுக்கி வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். நன்றாக ஊறிய பின்பு தினசரி ஊறுகாய் போல் உணவுடன் சில துண்டுகளைச் சாப்பிடலாம். இதனால் வாத, பித்த, கப நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

இஞ்சியை தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் பொரித்தெடுத்து உலர்த்தி, பொடித்து, போத்தலில் போட்டுவைத்துக் கொள்ள வேண்டும். சமிபாடின்மை, சுவையின்மை வயிற்றுப் பொருமல், ஓங்காளம் போன்றவற்றிற்கு 4 கிராம அளவு வெந்நீரில் எடுக்க நல்ல குணம் கிடைக்கும். சாதாரணமாகவே நாம் வீட்டில் தயாரித்து வைத்து பயன்படுத்தக்கூடியதொன்றாகும்.

காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு மாலையில் கடுக்காய் கொள்ள மனிதர் நீண்ட காலம் வாழலாம் என்பது பழமொழி மட்டுமல்ல அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மை.

ஜீவ சத்துக்கள் சிதைக்கப்படாமல், இரசாயனங்கள் கலக்கப்படாமல் கிடைக்கும் வெல்லத்துடன் ஆயுளைக் கூட்டவும், பித்தத்தை தணிக்கவும் இஞ்சியும், பசுவின் பாலும் கலந்து பருகுதலே சிறப்பு. இது காலை அருந்த வேண் டிய பானமாகும்.

இஞ்சியை ஏலக்காயுடன் சேர்த்து அரைத்து விழுதாக்கி 2 கிராம் அளவு தினமும் சாப்பிட்டு வந்தால் பசி எடுக்கும்.

இஞ்சிச் சாறு, தேன், வெங்காயச்சாறு மூன்றையும் சம அளவு கலந்து குடித்தால் இருமல், சளி போன்றவை குணமாகும்.

இஞ்சிச் சாற்றில் நாவல் விதைப் பருப்புக்களை ஊற வைத்து சாறு சுவறி உலர்ந்ததும் பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவர நீரிழிவு குணமாகும்.

புதினா இலையுடன், இஞ்சியைச் சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டுவர அஜீரணம், பித்தம் குணமாகும்.

இஞ்சிச் சாற்றில் பனை வெல்லம் கலந்து குடித்துவர வாத நோய்கள் தணிவடையும்.

மருத்துவ நோக்கிலும், சமையலிலும் இஞ்சிக்கு சிறப்பான இடம் உண்டு. இஞ்சிக் கார்ப்புச் சுவையும், குருதி தன் மையும், வறட்சியும், உஷ்ண வீரியமுள்ளதாகும். உண்ட பின்பு ஜடராக்கினியுடன் சேர்த்து பக்குவமடையும் போது மலத்தை இளக்கும், கபத்தையும் வாதத்தையும் தணிக்கும். இரத்தத்தை சுத்திகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவிடம் இலஞ்சம் பெற்ற

# பிரிட்டன் எம்.பி.பெய்ஸ்லி பகிரங்க மன்னிப்புக்கோரல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது, இலங்கை அரசாங்கத்திடம் சுற்றுலா இலஞ்சம் பெற்றமை காரணமாக பிரித்தானிய நாடாளு மன்றத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இயன் பெய்ஸ்லி பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.



நோத் என்றிம் தொகுதியிலுள்ள தமது ஆதரவாளர்களிடம் இயன் பெய்ஸ்லி இவ்வாறு மன்னிப்புக்கோரியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் செலவில் 2013ஆம் ஆண்டு சுற்றுலா மேற்கொண்டமையானது பிழையானது என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாக இதன்போது இயன் பெய்ஸ்லி தெரிவித்துள்ளார்.

நோத் என்றிம் தொகுதி மக்களுக்கு தமது சேவை தேவைப்படுமானால் அவர்கள் தம்மை மீண்டும் தெரிவு செய்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இயன் பெய்ஸ்லி செய்தியாளர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார். எனினும் அவர்களுக்கு ஆதரவாளர்களால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

## புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் மட்டக்களப்பில் விபத்தில் மரணம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு- கல்முனை வீதி தாளங்குடா சந்தியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்த கூலித் தொழிலாளி மரணித்து' விட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய எஸ். ஆறுமுகம் என்பவரே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணித்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற கார் வேகக் கட்டுப்பாட்டை யிழந்து தாளங்குடாவிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சைக்கிளில் வந்து கொண்டிருந்த கூலித் தொழிலாளி மீது மோதியதுடன் வீதி மருங்கிலிருந்த மரம் மற்றும் கொங்கிறீட் கற்குவியல் என்பவற்றிலும் மோதிநின்றது.

இச்சம்பவத்தில் காரை செலுத்திச் சென்ற வங்கி முகாமையாளரும் காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறைச்சாலை கூரைக்கு மேல் அல்ல எங்கு ஏறிப்போராட்டம் நடத்தினாலும் வழக்கு நடவடிக்கைகளில் மாற்றமில்லை

## நீதி அமைச்சர் தலதா திட்டவட்டம்

(கொழும்பு)

சிறைக்கைதிகள் கூரைக்குமேல் அல்ல, வேறு எங்கு ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்தாலும் வழக்கு நடவடிக்கைகள் வழமையான முறையிலேயே இடம்பெறும். அதில் மாற்றம் மேற்கொள்ளமுடியாது என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.



தாமதமாகிக் கொண்டிருக்கும் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக்குமாறும் தங்குமிட வசதிகள் மற்றும் ஆகார பான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரி வெலிக்கடை சிறைச்சாலைக் கூரைக்குமேல் ஏறி பெண் சிறைக்கைதிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம்மேற்கொண்டிருந்த னர்.

இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகள் சிலர் சிறைச்சாலைக் கூரைக்குமேல் ஏறி ஆர்ப்பாட்டம் செய்வதாக எனக்கு தகவல் கிடைத்தது. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்டேன். அவர்கள் கூரைக்குமேல் அல்ல, வேறு எங்கு ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்தாலும் வழக்கு நடவடிக்கைகள் வழமையான முறையிலேயே இடம் பெறும். அதில் மாற்றம் மேற்கொள்ளமுடியாது.

அத்துடன்யாருக்கு வேண்டுமானாலும் ஆர்ப்பாட்டம் நடத்தும் சுதந்திரத்தை நாங்கள் நாட்டில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். முன்னர் போல் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் மீது நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளமாட்டோம். கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி சிறைக்குச் சென்றவர்களில் 27 பேர் கொலை செய்யப்பட்டதற்கு கேள்வி தயாரித்தது போல் நாங்கள் கேள்வி தயாரிப்பதில்லை. அதனால் நாங்கள் மிகவும் நிதானமாக சிந்தித்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுப்போம்.

அத்துடன், சிறைச்சாலைகளுக்குள் சட்டவிரோத நடவடிக்கைகள் இன்னும் இடம் பெற்றுவருவதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை நாம் எப்படியாவது கட்டுப்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்த வருட இறுதிக்குள் அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டிவரும்

## கூட்டு எதிரணி எம்.பி.ரோஹித தெரிவிப்பு

(கொழும்பு)



நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்கும் முறையற்ற நடவடிக்கையினால் தொடர்ந்தும் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஆகவே இவ்வருடம் நிறைவடைவதற்கு முன் அரசாங்கம்வீட்டுக்குச் செல்ல வேண்டிவரும் என கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்லையிலுள்ள அக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலைக்கு நல்லாட்சி அரசாங்கம் தள்ளியுள்ளது. நாட்டில் தற்போது சகல துறைகளிலும் பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறுகிறது. படைப் பிரிவு மற்றும் பொலிஸாரைத் தவிர ஏனைய சகல தரப்பினரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு மக்கள் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நல்ல தீர்ப்பை வழங்கியிருந்தனர். அத்தேர்தல் மூலம் அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இல்லாது போயுள்ளது. மேலும், பிரதமர் பதவி கோரிய கூட்டு எதிர்க்கட்சியினர் தற்போது ஏன் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கோர வேண்டும் என அமைச்சர் மகிந்த அமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும், அவரைப் போன்று, கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிப்பவர்களுக்கு பதவி மோகம் இல்லை. பதவி மோகம் இருக்குமாயின் நாம் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருப்போம். ஆகவே. எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கோருவது பதவிக்காக அல்ல. நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை மேற்கொள்ளும் அரசாங்கத்துக்கு பாராளுமன்றில் உரிய வகையில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகும்.

மேலும் பாராளுமன்றின்முழு அளவிலான பொறுப்புக்கூறல் சபாநாயகருக்கு உள்ளது. எனவே எழுபது உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்பட வேண்டும் என சபாநாயகரின் உள் மனம் சொல்கிறது. இருந்தபோதிலும் அதற்கு அடுத்த சக்தி இடமளிப்பதில்லை. ஆகவே ஆட்சி மாற்றம் ஏற்படும் வரையில் கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைமையை வழங்காதிருப்பதற்கே எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் அரசாங்கமும் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியும் இணைந்தே ஆட்சியை முன்னெடுக்கின்றன.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானிக்கின்ற வேளையில் எமது பாராளுமன்ற உறுப்புரிமைக்கு சவால் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். அது குறித்து நீதிமன்றம் செல்வதற்கும் ஆயத்தமாக உள்ளோம். ஏனெனில் நாம் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றுக்குத் தெரிவாகவில்லை. மக்களின் ஆணை மூலமே தெரிவாகியுள்ளோம். எனவே அதனை முன்னிறுத்தி நீதிமன்ற நடவடிக்கைகளை எதிர் [illegible] தெரிவித்தார். (இ-7)

## கூட்டாட்சியில் குழப்பம்; சலிப்பு

# ஐ.தே.க.ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்த வேண்டியது அவசியம்

## அமைச்சர் கிரியெல்ல கூறுகிறார்

(கொழும்பு)



எமக்கென்று அரசாங்கம் ஒன்று அவசியம் என்பதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்த வேண்டியது அவசியமாகும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அடுத்த ஜனவரிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரம் உண்டு.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் வருவதற்கான சாத்தியம் உள்ளது. இதன்படி ஜனாதிபதி தேர்தலுக்கும்நாம்தயாராக வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை கிராம மட்டத்திலிருந்து தற்போதே முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கேரளாவில் கனமழை 8 ஆயிரம் கோடி சேதம்



(கேரளா)

கேரளாவில் வெள்ளத்தால் 8 ஆயிரத்து 316 கோடி ரூபா அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக முதல்கட்ட மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது. கடந்த 1924 ஆம் ஆண்டுக்குப் பிறகு கேரளாவில் மழை மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் வரலாறு காணாத கனமழையால் அம்மாநிலம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கோழிக்கோடு, இடுக்கி, மலப்புரம், கண்ணூர், வயநாடு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மாநிலம் முழுவதும் 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் 1,750 தற்காலிக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இங்கு தஞ்சமடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கூடுதல் முகாம்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கனமழை, வெள்ளம் மற்றும் மண்சரிவால் இதுவரை 39 பேர் பலியாகியுள்ளனர். 1,500 வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளதோடு 101 வீடுகள் முழுவதுமாக இடிந்து விழுந்துள்ளன.

இராணுவ வீரர்களும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவினரும் வீதிகளை தற்காலிகமாக சீரமைத்து பொதுமக்களை பாதுகாப்பாக மீட்டு நிவாரண முகாம்களுக்கு அழைத்து வந்தவண்ணம் உள்ளனர். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் உள்ள மக்கள் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் அவதிப்பட்டும் வருகின்றனர்.

மண்சரிவு மற்றும் கனமழையால் ஆயிரக்கணக்கான வாகனங்களும் சேதமடைந்துள்ளன. 10 ஆயிரம் கி.மீ.நீளத்துக்கு வீதிகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பாதிப்புக்காக உடனடியாக 400 கோடி ரூபா வழங்கவேண்டும் என்று கேரள முதலமைச்சர் விஜயன் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளப் பாதிப்புகளால் சுமார் 8 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், 1,200 கோடி ரூபா பேரிடர் நிவாரணத்தொகையாக வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (7)

## பங்களாதேஷில் கொலை, வழக்கில் தொடர்புடைய 5

(டாக்கா)


பங்களாதேஷில் இடம்பெற்ற விடுதலை போரின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்பட்டதுடன் 17 கொலைகள் மற்றும் 15 பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்கில் 5 பேருக்கு நேற்றையதினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷில் 1971 ஆம் ஆண்டு, பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சுதந்திரப் போராட்டத்தின்போது ஒரு தரப்பினர் பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயற்பட்டதுடன் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதைத்தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு போர்க்குற்ற வழக்குகளை விசாரிக்க சர்வதேச குற்றத்தடுப்பு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இங்கு நடைபெற்றுவரும் வழக்குகளின் விசாரணையில், பலருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போரின்போது பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி அயூப் கானுக்கு ஆதரவாகச் செயல்பட்டதுடன் பங்களாதேஷின் பட்டுவாகாலி மாவட்டத்துக்கு உட்பட்ட இட்டாபாரியா கிராமத்துக்குள் புகுந்து 17 பேரை கொன்றதாக (முன்னாள்) பழைமைவாத முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த

## 72 வது சுதந்திரதினத்தை முன்னிட்டு சென்னை கோட்டையில் நேற்று ஒத்திகை




(சென்னை)

நாட்டின் 72ஆவது சுதந்திர தினத்தையொட்டி சென்னை கோட்டையில் மூன்றாம் நாள் அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது.

இதில், கமாண்டோ படை, குதிரைப்படை, பெண் காவலர்கள், தேசிய மாணவர் படை மற்றும் மாணவ - மாணவியர் பங்கேற்றனர். மேலும், முதலமைச்சர் தேசியக் கொடியை ஏற்றி, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதை போலவும், ஒத்திகை நடைபெற்றது. இதில் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் பங்கேற்றனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற ஒத்திகையால், ராஜாஜி விதி மற்றும் கொடிமர வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு வேறு வழிகளில் மாற்றம் செய்யப்பட்டது. (7)

## தூதுவிட்டார் அழகிரி நிராகரித்தார் ஸ்டாலின்



(சென்னை)

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் அழகிரி தி.மு.கவின் செயல் தலைவர் ஸ்டாலினுடன் பேசுவதற்கு தூது அனுப்பியதாகவும் ஸ்டாலின் அதனை நிராகரித்து விட்டதாகவும் தகவல்கள்வெளியாகியுள்ளன.

மெரினாவில் கருணாநிதி சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்திய பின்னர் அழகிரி தி.மு.கவில் எனக்குத்தான் அதிக தொண்டர்கள் எனத் தெரிவித்திருந்தார்.

அழகிரியின் இந்தக் கருத்தினால் ஸ்டாலின் கடும் சீற்றமடைந்துள்ளார். இதன் காரணமாக கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்ற அழகிரியுடன் ஸ்டாலின் பேசவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து அழகிரி ஸ்டாலினுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு சிலரை தூது அனுப்ப அழகிரி தீர்மானித்துள்ளார்.

இதற்காக தி.மு.கவில் தனக்கும் ஸ்டாலினிற்கும் நெருக்கமாக உள்ள பிரமுகர்கள் சிலரை அழகிரி தொடர்புகொண்டார். ஆனால் ஸ்டாலின் கடும் கோபத்தில் இருப்பதாகவும் அழகிரியுடன் பேச விரும்பவில்லை என அழகிரிக்கு தெரிவிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பதிலால் சீற்றமடைந்த அழகிரி மீண்டும் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டுள்ளார்.

தி.மு.கவை நான் உடைக்கவேண்டிய தேவையில்லை அது தானாகவே உடையும் என அவர் தெரிவித்தார். (7)

## ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்

## தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று விசாரணைக்கு உத்தரவு

### —உச்ச நீதிமன்றம்—

(டில்லி)

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான உத்தரவை அவசரமாக மனுவாக விசாரிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி, கடந்த மே மாதம் 22 ஆம் திகதி அங்கு நடைபெற்ற போராட்டத்தில் கலவரம் ஏற்பட்டது.

அப்போது பொலிஸார் நடத்திய தடியடி, துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் பலியானார்கள். இதைத்தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட தமிழக அரசு மே 28 ஆம் திகதி உத்தரவிட்டது. அதன்படி அந்த ஆலைக்கு 'சீல்' வைக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஸ்டெர்லைட் நிர்வாகம், டில்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தது. தேசிய பசுமை தீர்ப்பாய உறுப்பினர்களான நீதிபதிகள் ஆதர்ஷ்குமார் கோயல், டாக்டர் ஜவாத் ரகீம், எஸ்.பி.வங்டி, டாக்டர் நகின்நந்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த 9 ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது, ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு பிறப்பித்த ஆணை மாநில அரசின் அதிகாரத்தை பயன்படுத்தி வெளியிடப்பட்டது என்றும், இந்த ஆணையை எதிர்த்த ஸ்டெர்லைட் நிர்வாகம் மேல்முறையீடு செய்ய முடியாது என்றும், எனவே மனுவின் ஏற்புத்தன்மை கேள்விக்குரியது என்றும் தமிழக அரசு தரப்பில் வாதங்கள்

## சுதந்திரதினத்தின் போது பிளாஸ்ரிக் தேசியக் கொடிகள் பயன்படுத்த வேண்டாம்

### மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்து

(டில்லி)

சுதந்திர தினத்தின் போது பிளாஸ்ரிக் தேசியக் கொடிகளை பயன்படுத்த வேண்டாம் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் 72 ஆவது சுதந்திர தினம் இன்று 15 ஆம் திகதி நாடு முழுவதும் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிலையில் அந்த அமைச்சகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், பிளாஸ்ரிக் தேசியக்கொடிகளை பயன்படுத்த வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் காகிதத்தால் செய்யப்பட்ட தேசியக்கொடிகளை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தையொட்டி தேசியக்கொடியை உரிய மரியாதையுடன் பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..., பாலியல் துஷ்பிரயோக ... பேருக்கு மரண தண்டனை

5 பேர் கடந்த 2015 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டனர்.

மேலும், அதே கிராமத்தில் 15 பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்து பொதுச் சொத்துகளை சேதப்படுத்தியது. வீடுகளை எரித்தது. ஆள் கடத்தல், சித்திரவதை செய்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பங்களாதேஷ் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 5 பேருக்கும் முன்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து மூன்று நீதிபதிகளைக் கொண்ட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் அவர்கள் மேன்முறையீடு செய்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இவ்வழக்கில் தீர்ப்பளித்த தீர்ப்பாயம், 'போர்க்குற்றத்தின் ஒரு பகுதியாக ' இவர்கள் 5 பேரும் பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். அவர்களுக்கு நாம் அளிக்க வேண்டிய அங்கீகாரமாக இத்தகைய குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை விதித்தே ஆக வேண்டும்.

எனவே குற்றவாளிகள் முஹம்மது இஷாக்ஷிக்தர், அப்துல் கனி, முஹம்மது அவால், சத்தார் படா, சுலைமான் மிருதா ஆகியோரை சாகும் வரை தூக்கிலிட்டு கொல்லுமாறு உத்தரவிடுகிறோம்' என தெரிவித்துள்ளது. (7)

# இந்திய எல்லைப் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவல்



(டில்லி)

இந்தியாவின் லடாக் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவி கொட்டகைகள் அமைத்து முகாமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா, பூட்டான், சீனா ஆகிய 3 நாடுகள் சந்திக்கும் இடத்தில் டோக்லாம் பகுதி அமைந்துள்ளது. இதற்கு 3 நாடுகளும் உரிமை கோரி வருவதால் பிரச்சினைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது. சீனா கடந்த ஆண்டு இந்த பகுதியை நோக்கி வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டது. அப்போது இந்திய இராணுவம் அதை தடுத்து நிறுத்தியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே 2 மாத காலமாக பதற்றம் நீடித்தது. இந்தியா-சீன தலைவர்கள் சந்தித்து பேசியபின்பு பதற்றம் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் சீனா மீண்டும் இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கிழக்கு லடாக்கில் உள்ள டெம்சாக் செக்டாரில் சுமார் 300-400 மீற்றர் தொலைவுக்கு ஊடுருவிய சீன இராணுவம், 5 கொட்டகைகளை அமைத்துள்ளது.

அதன்பின்னர் பிரிகேடியர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து 3 கொட்டகைகளில் சீன இராணுவம் அகற்றி உள்ளதாகவும், மீதமுள்ள இரண்டு கொட்டகைகளில் சீன வீரர்கள் இன்னும் தங்கியிருப்பதாகவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக இராணுவத் தரப்பில் உறுதியான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேபோல் கடந்த ஜூலை மாதமும் இந்தியப் பகுதிக்குள் சீன இராணுவம் ஊடுருவியதாகவும், பின்னர் இந்திய வீரர்கள் தொடர்ந்து கொடி அணிவகுப்பு நடத்தியதையடுத்து சீன வீரர்கள் திரும்பிச் சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே எல்லைப் பிரச்சினைக்குரிய 23 இடங்களில் டெம்சாக் பகுதியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்கவுள்ள இம்ரான்கானுக்கு சவுதி மன்னர் வாழ்த்து





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் பிரதமராக பதவியேறவுள்ள தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான் கானுக்கு சவுதி மன்னர் சல்மான் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து அக்கட்சியின் தலைவர் இம்ரான்கான் எதிர்வரும் 18 ஆம் திகதி பிரதமராக பதவியேற்கவுள்ளார். இவருக்கு பல்வேறு தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள இம்ரான் கானுக்கு சவுதி அரசர்சல்மான் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அதேபோல், இளவரசர் முகமது பின் சல்மானும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜப்பான், ஈரான் போன்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களும் தங்களது வாழ்த்துக்களை இம்ரான்கானுக்கு தெரிவித்து வருகின்றனர். (7)

# சுற்றுலாப் பயணியை கொன்ற நீர்யானை



(நைரோபி)

கென்யாவில் உள்ள வனவிலங்குகள் சரணாலயத்தில் தாய்வான் சுற்றுலாப் பயணியை நீர்யானை கடித்துக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கென்யாவின் தலைநகர் நைரோபி அருகே நைவாசா என்ற ஏரியில் நீர்யானைகள் சரணாலயம் உள்ளது. இது மலைக்கு இடையில் அமைந்துள்ளது.

தாய்வானைச் சேர்ந்த சுற்றுலா பயணி சங்மிங் சாங் (வயது-66) என்பவர் வனவிலங்கு சரணாலயத்தை சுற்றிப்பார்த்தார்.

பின்னர் மலையின் உயரமான இடத்தில் இருந்து நீர்யானைகளை போட்டோ எடுத்தார். அப்போது கால் தவறி நீர்யானைகள் இருந்த குளத்துக்குள் விழுந்து விட்டார். இதனால் ஆவேசம் அடைந்த நீர்யானை அவரை கடித்து குதறியது. வலி தாங்க முடியாமல் அவர் அலறினார்.

உடனே அங்கிருந்த பாதுகாவலர்கள் அவரை மீட்டனர். இருந்தும் மார்பில் பலத்த காயம் அடைந்த அவர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார். இந்த ஆண்டு மட்டும் இதுவரை 6 பேர் நீர்யானைகளால் கடித்து கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

முன்வைக்கப்பட்டன.

அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், ஸ்டெர்லைட் ஆலை தரப்பில் வாதத்தை தொடருமாறு உத்தரவிட்டனர். மேலும் ஸ்டெர்லைட் ஆலையில் நிர்வாக பணிகளை மட்டும் மேற்கொள்ள நீதிபதிகள் அனுமதி வழங்கி இடைக்கால உத்தரவிட்டனர்.

நிர்வாக ரீதியிலான பணிகளுக்காக ஆலைக்குள் ஊழியர்களை அனுமதிக்க வேண்டும். ஆலை இயங்காமல் இருப்பதை தூத்துக்குடி ஆட்சியர் கண்காணிக்க வேண்டும்.

ஆலையில் அமிலக் கசிவை கண் காணிக்க தனி அதிகாரியை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் பரிந்துரைக்க வேண்டும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் இந்த அதிகாரியும் இணைந்து ஆலையால் ஏற்பட்ட மாசு தொடர்பான அறிவியல்பூர்வ ஆதாரங்களை தமிழக அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்று தீர்ப்பாய நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

இதற்கு தமிழக அரசு தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ளாத நீதிபதிகள், எக்காரணம் கொண்டும் ஆலை இயங்க அனுமதி கிடையாது என்றும், நிர்வாகப் பணிகளை மட்டும் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள்.

இந்த உத்தரவை எதிர்த்தும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க கோரியும் தமிழக அரசின் சார்பில் அரசு சட்டத்தரணி யோகேஷ் கன்னா நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார்.

இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என தமிழக அரசு தரப்பு கோரிக்கை விடுத்தது. இந்த நிலையில், தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று நாளை மறுதினம் 17 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (7)

# பாகிஸ்தானின் 72வது விடுதலை நாள்; இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் விடுதலை நாளையொட்டிப் பஞ்சாபின் வாகா எல்லையில் அந்நாட்டுப் படைவீரர்கள் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு இனிப்பு வழங்கினர்.

பாகிஸ்தான் நாட்டின் 72ஆவது விடுதலைநாள் நேற்றையதினம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டிப் பஞ்சாபின் அட்டாரி - வாகா எல்லையில் பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படைவீரர்கள், இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு இனிப்பு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்தியப் படையினர் பாகிஸ்தான் படையினருக்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துக் கொண்டனர். (7)

# இஸ்ரேல்-எகிப்து நாடுகள் இரகசியப் பேச்சுவார்த்தை

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, எகிப்திய ஜனாதிபதி அப்துல் பஃட்டா அல் சிசியுடன் பாலஸ்தீனிய காஸா எல்லையில் நீண்ட கால யுத்த நிறுத்தம் தொடர்பாக கடந்த மே மாதம் இந்த இரகசிய சந்திப்பு ஒன்று நடத்தியதாக இஸ்ரேலின் சௌனல் 10 ஊடகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் இந்த தகவல் தொடர்பாக நெதன் யாஹுவின் பேச்சாளர் எந்த வித கருத்துக்களையும் வெளியிட மறுத்து விட்டார்.

அதேவேளை, எகிப்து அதிகாரிகளிடமிருந்தும் உடனடியாக எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை. கடந்த மே 22ஆம் திகதி குறித்த சந்திப்பு இடம்பெற்றதாகவும், பெயரிடப்படாத அமெரிக்க உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி சௌனல் 10 ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசு மீது எனக்கும் வெறுப்பு!

## ஐ.தே.க. அமைச்சர் ஹரின் வெளிப்படை



**(கொழும்பு)**

**நல்லாட்சி அரசாங்கம் தொடர்பாக கட்சியினர் மட்டுமல்லாது தானும் வெறுப்பில் இருந்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக்கட்சியின் பதுளை தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி காரணமாக பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியினர்.

நல்லாட்சியால் மக்களுக்கு நல்லது நடந்ததே தவிர கட்சியினருக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்க சமாதானப் படைக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம்




(கொழும்பு)

அமெரிக்க சமாதானப் படையின் தன்னார்வத் தொண்டர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதன் மூலம் ஆங்கிலக் கல்விக்கான ஒத்துழைப்பை முறைப்படுத்துவதன் நிமித்தம் இலங்கை கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சிக்கும் சமாதானப் படையின் இலங்கைக்கான பணிப்பாளர் கிரிஷ் பெஸ்க் ஆகியோருக்கும் இடையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தம் கடந்த 9 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

1962 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சமாதானப் படையின் தொண்டர்கள் இலங்கையில் பணியாற்றியிருந்தனர். தற்போது Peace Corps Response என்று அழைக்கப்படும் Peace Corps Crisis Corps ஆனது 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மீட்புப் பணிகளிலும் உதவி வழங்கியிருந்தது.

**இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க பதில் தூதுவர் ரொபர்ட் ஹில்டன் மற்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் முன்**னிலையில் கல்வி அமைச்சில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய பதில் தூதுவர் ரொபர்ட் ஹில்டன் 1961 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோன்.எப்.கென்னடியால் சமாதானப் படை ஸ்தாபிக்கப்பட்டதையும் இலங்கையில் நீண்ட வரலாறு கொண்ட அதன் சேவையையும் நினைவுகூர்ந்தார். ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பான தற்போதைய உதவியானது அனைத்து இலங்கையர்களுக்கும் வாய்ப்புக்கான கதவுகளை திறக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்வித் துறை தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அமைதிப் படையின் தொண்டர்களின் 25 பேர் கொண்ட முதலாவது அணியானது 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை வரவுள்ளதுடன், இரண்டு வருடங்களுக்கு சேவை புரிவதற்கு அந்த தொண்டர்களுக்கு பணியிலக்குகள் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் கலாசாரம், மொழி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக 3 மாத விரிவான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் அமைதிப் படையின் பணியானது, ஆங்கில மொழிக் கல்வி மற்றும் இலங்கையின் ஆங்கில ஆசிரியர்கள் சங்கத்துடன் இணைந்து கல்வி அமைச்சு, பாடசாலைகள் மற்றும் சமூகக் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து கவனம் செலுத்துவதாக அமையவுள்ளது.

அமெரிக்கத் தூதரகம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பு (யுஎஸ் எயிட்) நிதியுதவியளிக்கப்படும் ஏனைய பல ஆங்கிலம் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்களையும் அவர்களே முன்னெடுப்பார்கள்.




சமாதானப் படையை மீண்டும் இலங்கை வருமாறும் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை நோக்கி முன்னேறுவதற்கு உதவி செய்யுமாறும் 2016 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் நிறுவுவது தொடர்பில் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புதிய இருதரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

சமாதானப் படையானது ஐக்கிய அமெரிக்கா சார்பில் வெளிநாடுக்குச் சென்று சேவையாற்ற ஆர்வமாகவுள்ள அமெரிக்கர்களை உள்ளூர் சமூகங்களுடன் இணைந்தும் நீடித்து நிலைக்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் பணியாற்றுவதற்கு அனுப்புகிறது. இதன் தன்னார்வத் தொண்டர்கள் கல்வி, சுகாதாரம், சமூகப் பொருளாதார அபிவிருத்தி, விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் இளைஞர் அபிவிருத்தி போன்ற விடயங்களில் காணப்படும் சவால்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகளை உருவாக்குவார்கள்.

சமாதானப்படை அனுபவத்தின் ஊடாக தன்னார்வத் தொண்டர்கள் தனித்துவமான கலாசார புரிந்துணர்வுகள் மற்றும் உலகப் பொருளாதாரம் இன்று இருக்கும் நிலையில் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்கான வாழ்நாள் முழுவதுமான அர்ப்பணிப்பு போன்றவற்றைப் பெற்றுக்கொள்வர். ஜனாதிபதி ஜோன் எப். கென்னடி 1961 ஆம் ஆண்டு சமாதானப் படையை உருவாக்கியதிலிருந்து இதுவரை 2 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள் உலகளாவிய ரீதியில் 141 நாடுகளில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### இயலாமைகளைப் பற்றி வெட்கம் ஏன்?

திருமண இல்லம் ஒன்றிலிருந்து நண்பர் ஒருவரை வழியனுப்ப வாசல் வரை வர ஆயத்தமானேன். "கார் எங்கே நிற்கிறது?" என்று கேட்டேன். "கொஞ்சம் தள்ளி நிறுத்தியிருக்கிறேன். நீங்கள் இருங்கள் (உள்ளே போங்கள்)" என்றார். பரவாயில்லை வாருங்கள் என்று வாசலுக்கு வந்தேன். பார்த்தால் ஸ்கூட்டர்! அப்புறம் என்ன? மனிதர் அசடு வழிந்து தள்ளி விட்டார்!

ஸ்கூட்டர் வைத்திருப்பதை அவர் ஏன் கௌரவக்குறைவாக எண்ண வேண்டும்? இல்லை இன்று காரில் வரவில்லை என்று சொல்லலாமே!

"இது உங்கள் வீடா?" என்று கேட்டதும், "இல்லையில்லை இது வாடகை வீடு" என்று தயக்கமில்லாமல் சொல்பவர்கள் எத்தனை பேர்? உடனே அசடு வழிந்து, குற்ற உணர்வை நெஞ்சில் நிரப்பிக்கொண்டு அவமானப்படுத்தப்பட்டவர்களைப் போல குரலைத் தாழ்த்திக்கொண்டு "அதுக்கெல்லாம் நான் எங்கே போவேன்?" என்று முகாரி இராகம் பாட ஆரம்பித்து விடுகிறார் கள்.

"என்ன ஒரு மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குவீர்களா" இல்லீங்க, என் சம்பளம் சுமாருதாங்க.1200 ரூபாய் தான் குரலில் இளக்காரம்; வெட்கம்.

"தமிழில் நல்ல மார்க்கா?" என் றால் முகம் மாறி, "இல்லை 60தான்" என்று கருதி இறங்கிப் பேசுகிறது சில மாணவக் கும்பல். "அடுத்த முறை நல்ல மார்க் எடுப்பேன். இப்ப 60 தான் கிடைச்சுது" என்று சிரித்த முகத்தோடு சொல்ல வல்லவர்கள் எத்தனை பேர்?

கேட்பவர்கள், கற்பித்துக்கொள்பவர்கள், யதார்த்த நிலை தெரியாமல் ஆயிரம் கற்பனைகளில் இருந்து கொண்டு வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று எதையாவது கேட்டு வைப்பார்கள். இவர்கள் முன் னிலையில் நாம் ஏன் வெட்கப்பட வேண்டும்?

அவரவர்களுக்கு நாம் பிளேன் வைத்திருக்கிறோம் என்றும், அரண் மனையில் வாழ்கிறோம் என்றும், 99 மார்க் எடுப்பவர்கள் என்றும் நினைப்பு இருக்கும். இதற்கெல்லாம் நாமா கிடைத்தோம்?

நம்மைப்பற்றி உயர்வாகக் கணித்திருக்கிறார்கள்; பரவாயில்லை. அவர்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாம் உயர வேண்டும் என்று உத்வேகத்தை ஏற்படுத்திக்கொண்டால் அது புத்திசாலித்தனம்.

அதை விட்டுவிட்டு "அவர் அப்படிக் கேட்டுட்டாரு. எனக்கு ரொம்ப அசிங்கமாகப் போச்சு! என்ன பதில் சொல்றதுன்னே தெரியலை" என்று சங்கடப்படுகிறவர்கள் நடைமுறை வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வராதவர்களே!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மத்தள விமான நிலையத்தில் இராணுவ செயற்பாட்டில் ஈடுபடக்கூடாது

## (கொழும்பு) —— சீனா வலியுறுத்து

**மத்தள விமான நிலையத்தை இந்தியாவிற்கு வழங்கும் செயற்பாட்டில் தமது தலையீடு இருக்காது என்ற போதிலும் அங்கு எந்தவொரு இராணுவச் செயற்பாடுகளும் இடம்பெறக்கூடாது என சீனா வலியுறுத்தியுள்ளது.**




மத்தள விமான நிலையத்தை குத்தகை அடிப்படையில் இந்தியாவிற்கு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளியாகும் நாளிதழொன்றுக்கு சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான தலைவர் லூ ஜொங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "மத்தள விமான நிலையத்தை யாருக்கு குத்தகைக்கு வழங்குவது என்பதை தீர்மானிக்கும் உரிமை இலங்கை அரசாங்கத்திற்குண்டு.

பிறிதொரு நாட்டு அரசாங்கத்தின் தீர்மானத்தில் தலையீடு செய்வதற்கான உரிமை எமக்கில்லை.

எனவே, இவ் விடயத்தில் சீனா ஒருபோதும் தலையீடு செய்யாது.

ஆனால், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா எவ்வாறு வர்த்தக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தி வருகிறதோ, அதே போன்று மத்தள விமான நிலையமும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். மத்தள விமான நிலையத்தில் எவ்வித இராணுவச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படக் கூடாது" எனத் தெரிவித்தார். (இ-7)






கோண்டாவில் தென்மேற்கு முதியோர் சங்கத்தினர் கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பிரதேசத்துக்கு ஆன்மீக சுற்றுலாவை மேற்கொண்டனர். திருக்கோணேஸ்வரர் ஆலயம் பத்திரகாளி அம்மன் கோவில் ஏழு வெந்நீர் ஊற்றுகள் நிலாவெளியில் அமைந்துள்ள லக்ஷ்மி நாராயணன் ஆலயம் போன்ற புண்ணிய ஸ்தலங்களை தரிசித்தனர்.

# யால தேசிய பூங்காவின் ஒரு பகுதி இரண்டு மாதங்களுக்கு மூடல்

(கொழும்பு)

யால தேசிய பூங்கா எதிர்வரும் இரண்டு மாத காலத்திற்கு மூடப்படும் என வன விலங்கு பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. சுற்றுலா விடுதிகளை மீள் புதுப்பித்தல் செய்தல் மற்றும் பூங்காவிலுள்ள ஏனைய உட்கட்டமைப்பு பணிகளை மேம்படுத்துவதற்காகவே மூடப்படவுள்ளது.

மேலும், "இங்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருகை தருவதன் காரணமாக விலங்குகள் அடிக்கடி திசை திருப்பப்படுகின்றன.

எனவே, விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இதன் காரணமாகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக" வன விலங்கு பாதுகாப்புத்துறை அதிகாரி சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் தேசிய வனப்பூங்காவின் பகுதி (இல.1) மூடப்படவுள்ளது. இருப்பினும் இப் பூங்கா பகுதியளவில் இயங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய தேர்தல் முறைமையால் சிறுபான்மையினருக்கு ஆபத்து

## பிரதியமைச்சர் அமீர் அலி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் புதிய சட்டத்தின் பிரகாரம் தொகுதி ரீதியாக நடைபெற்றால் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்கு பெரும் ஆபத்தாக அமையும் என பிரதியமைச்சர் எம்.எஸ். எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தல்களை எக் காரணம் கொண்டும் சிறுபான்மை கட்சிகள் புதிய தேர்தல் முறைப்படி நடத்துவதற்கு இடமளிக்கக் கூடாது.

ஏனெனில் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிறுபான்மை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையக தமிழர்கள் தமக்கென்று ஒரு பிரதிநிதியை பெற்றுக் கொள்ள முடியாது போகும் தேர்தல் முறைமையே இதுவாகும்.

சிறுபான்மையினர் மீது அரசியல் ரீதியாக அநியாயத்தை செய்துவிடக்கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

இது போன்ற சட்டமூலம் இன்னுமொருமுறை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாகவிருந்தால் எதிர் காலத்தில் சிறுபான்மைக் கட்சிகளினால் அது தோற்கடிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சிகளுக்கு அதிகாரங்களை பகிராவிட்டால் நான் எதிர்ப்பேன்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கு, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்திய கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், அவ்வாறு இல்லாத பட்சத்தில், எதிர்ப்புக்களை வெளியிட நேரிடும் என்றும் சாடியுள்ளார்.

பிரதேச சபைகளின் செயற்பாடுகளுக்கு, அம்பகமுவ பிரதேச செயலகம் இடையூறாக இருப்பதாக, அம்பகமுவ பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையில், இதற்குப் பதிலளிக்கும்போதே, கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், தான் பிரதேச சபையின் தலைவராகவும் மாகாண அமைச்சராகவும் பதவி வகித்து வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியதுடன், அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவே, மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில், அதிகாரப் பகிர்வு முறையாக இடம் பெறவில்லை எனில் அதனை முற்றுமுழுதாக எதிர்ப்பதாகத் தெரிவித்த அவர், இவ் விடயம் தொடர்பில், நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கும் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, இவ்விடயம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் தமிழ்மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களிலும் நிலவும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு தீர்வு காண்பது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வு காணும் நோக்கில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி தேசிய மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் மனோ தெரிவித்தார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் உயர்தர பௌதீக விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகள் ஒரு பாடசாலையில் மாத்திரமே இயங்குவதாக மாவட்ட செயலாளர் மகிந்த வீரசூரிய தெரிவித்தார்.

கணித, விஞ்ஞான பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களே இதற்கான காரணமாகும். பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியை வழங்குவது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிடின் அடுத்த தேர்தல் வரை வேலை நிறுத்தங்கள் தொடரும்

## இம்ரான் மகரூப் எம்.பி.எச்சரிக்கை

(கிண்ணியா)

அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் அடுத்த தேர்தல் வரை வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா ஜாயா வித்தியாலயத்தின் சுற்றுமதிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் போது இந்த நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும் என வாக்குறுதியளித்தோம்.

நாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம் என்பதற்கான சான்றே இப்போது நடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்கள்.



நான்கு மணிக்கு முடிவெடுத்து ஐந்து மணிக்கு வேலைநிறுத்தம் செய்யும் அளவுக்கு நாட்டில் அதியுச்ச ஜனநாயகம் காணப்படுகிறது. கடந்த ஆட்சியைப் போன்று வேலை நிறுத்தம் செய்யும் தொழிற்சங்கத் தலைவர்களது வீடுகளுக்கு வெள்ளை வான் வராது. அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படமாட்டார்கள்.

தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் இந்த வேலை நிறுத்த போராட்டங்களுக்குப் பின்னால் பாரிய அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்றுள்ளது.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முதல் அடுத்த தேர்தல்வரை தொடர்ச்சியாக வெவ்வேறு தொழிற்சங்கங்கள் மூலம் வேலை நிறுத்தப் போராட்டங்களை நிகழ்த்தி மக்களின் அன்றாட நடவடிக்கைகளை குழப்புவதன் மூலம் அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை உண்டாக்கல் மற்றும் அரச அலுவலகங்களை முடக்கி பொருளாதாரத்தை ஸ்தம்பிக்க செய்வதை நோக்காகக் கொண்டு மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில் இப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதம் தபால் ஊழியர்கள், அதற்குப்பின் வைத்தியர்கள் நேற்று ரயில்வே நாளை தனியார் பேருந்துகள் என இது தொடர்ந்து கொண்டே போகும்.

ஆகவே இதைத் தடுக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்காவிடின் எதிர்வரும் நாட்களில் பொதுமக்கள் பாரிய இன்னல்களை எதிர் கொள்ள நேரிடும்.

நல்லாட்சி அரசு வழங்கிய அதியுச்ச ஜனநாயகத்தை தொழிற்சங்கங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் இந்த அரசையும் மெல்ல மெல்ல சர்வாதிகாரப் போக்குக்கு செல்ல வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் ஜெயகுமார் பிரவிணா எனும் மாணவிக்கு றஞ்சிற் மோட்டோர்ஸ் உரிமையாளர் துவிச்சக்கர வண்டியை அண்மையில் வழங்கினார். இதில் வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் நாகேந்திரமும் கலந்து கொண்டார்.

# இந்தியா வெளியேற்றிய இரசாயனக் கழிவுகளே கரையொதுங்கின

(கொழும்பு)

இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகளே புத்தளம் கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடல் சூழல் பாதுகாப்புச் சபை இதனைத் தெரிவித்துள்ளது. புத்தளம் கடற்கரைப் பகுதியில் ஆயிரக் கணக்கான மருத்துவக் கழிவுப் பொருட்கள் கரையொதுங்கியிருந்தன.

காலாவதியான மருந்துகள், மருந்துப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் மற்றும் ஊசிகள் போன்ற கழிவுப் பொருட்கள் பெருமளவில் கரையொதுங்கின.

இந்த மருத்துவக் கழிவுப் பொருட்கள் கடலில் கொட்டப்பட்டமை அபாயகரமானது என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே, இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகளே புத்தளம் கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 4 (ராகு)


## (சாகசச்சக்கரவர்த்திகள்)

இவர்களின் பேச்சு மற்றவர்களைச் சிந்திக்க வைக்கும். பொது நலச் சேவையில் மனம் விரும்பி ஈடுபடுவார்கள். இவர்களை எளிதில் யாராலும் புரிந்து கொள்ள முடியாது. மக்களை எளிதில் கவர்ந்து விடுவார்கள். இவர்கள் பக்கம் ஆதரவுக்கரம் நீட்டப் பலபேர் காத்துக் கொண்டிருப்பார்கள். போராட்ட நடவடிக்கைகளை எளிதில் செயற்படுத்துவார்கள். மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்வார்கள். இவர்களது பேச்சுக் கோழைகளைக்கூட வீரனாக்கிவிடும். தன்னுடைய குணங்களைப் பாராட்டிக் கொள்வார்கள். வரலாறு படைப்பார்கள்

இறந்த பின்னரும் இவர்கள் பேசப்படுவார்கள். இராகு ஆதிக்கம் குறைந்த சிலபேர் குற்றவாளிகளாக மாறுவார்கள். முறையற்ற காமம், எதிரிகளின் தாக்குதல், வீணான அச்சம், தீராத பகை போன்றவற்றால் பாதிப்படைவார்கள். நோய் வசப்படுவார்கள். எளிதில் குணமாகாத வியாதிகளும் இவர்களைத் தொற்றிக கொள்ளும். விஷ சம்பந்தப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாவார்கள். எப்போது பார்த்தாலும் சோகமாகவே காட்சியளிப்பார்கள். கோபம் அதிகம் வரும். எதற்கெடுத்தாலும் உணர்ச்சிவசப்பட்டு பேசுவார்கள். பெரியவர்களை மதிக்கமாட்டார்கள். மற்றவர்கள் கருத்தைக் கிண்டலடித்துக் கொண்டிருப்பார்கள். குறிக்கோள் இல்லாமல் புறம்கூறித் திரிவார்கள். முறையற்ற திருமண வாழ்க்கை அமைந்து விடும். தாம்பத்திய சுகம் இல்லாமல் போய்விடும். தவறான தொடர்பால் தன் மானத்தை இழப்பார்கள். எனவே தவறான வழியில் செல்லும் 4ஆம் எண்காரர்கள் அதிர்ஷ்டப் பெயர் மூலம் நல்ல நிலைக்கு முன்னேற எண்களின் இயற்கை வழிகாட்டும்.

### ராகு ஆதிக்கத்தினரின் உடல் அமைப்பு,நோய் மற்றும் உணவு முறைகள்

4ஆம் எண்காரர்கள் சாதிக்கும் எண்ணமுடைய பாம்பு போன்ற தோற்றமுடையவர்கள். பருத்த உடலமைப்பு இருக்கும். நல்ல உயரம் அல்லது நடுத்தரமான உயரத்துடன் இரண்டு விதமாகக் காணப்படுவார்கள். வயது செல்லச் செல்ல உடல் பருத்துக்கொண்டே இருக்கும். முகம் பெரிதாக இருக்கும். கண்கள் மூடி இருக்கும். அடர்த்தியான முடியிருக்கும். நரம்புச்சக்தி வாய்ந்தது. நோய்கள் எளிதில் இவர்களைத் தீண்டுவதில்லை. உடம்பில் ஜீவகாந்த சக்தி அதிகம் இருக்கும். தியானம் செய்ய ஏற்ற உடல் வாகு அமையும். மனம்தான் அதிக பாதிப்புக்குள்ளாகும். நோய் வந்தாலும் சீக்கிரம் நீங்கி விடும். உணவுக் கட்டுப்பாடு வேண்டும். இரத்த சோகை வரும். எளிதில் ஜீரணசக்தி உடைய உணவை உட்கொள்ள வேண்டும். இராகு ஆதிக்கப் பெண்கள் கவர்ச்சியான கூந்தலை கொண்டவர்கள். நொறுக்குத் தீனி அதிகம் உண்டால் வயிறு பெருத்துவிடும். பற்கள் வரிசையாக அமைந்திருக்கும். நெற்றி நீண்டிருக்கும். இரட்டை நாடி உடையவர்கள். வேகமாக நடக்கவும் சாப்பிடவும் முடியும். இவர்களுடைய நடவடிக்கைகள் துரிதமாகவே இருக்கும். உணவுக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் பித்த சம்பந்தமான நோய்கள் தாக்கும். மனச்சோர்வு உண்டாகும். பசியின்மை, குடலிறக்கம், வயிற்றுக் கோளாறு, குடல் புண், பின் கழுத்து வலி, தலை வலி, இடுப்பு வலி, கை கால் வலி, வாயுபிடிப்பு உண்டாகும். நரம்பு பலவீனம் மூட்டுவலி தோன்றும். ஆழ்ந்த தியானத்தின்




மூலம் பலனடைவார்கள். உடற்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் நோய் நீங்க அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

### ராகு ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தொழில்கள்

தீவிரமான கருத்துக்களை வெளியிடும் இவர்கள் பிரசங்கம் செய்தல், பத்திரிகைத் துறை, கதை, கட்டுரை, காவியம் புனைதல், கலை, சினிமாத்துறை, ஆராய்ச்சி, கம்யூட்டர், உடற்கல்வி, சாகசங்கள், சர்க்கஸ், வைத்தியம் ஜோதிடம், சங்கீதம், நாட்டியம், வாசிகசாலைகள், புத்தக வெளியீடு, நீச்சல் தொழில்கள், வளர்ப்புப் பிராணிகள் வளர்த்து விற்றல் வியாபாரம், மரப் பொருட்கள் உற்பத்தி, பேருந்து போக்குவரத்துச் சம்பந்தப்பட்ட துறைகள், படம் எடுத்தல், புத்தக பிரசுரம், வீடு கட்டுதல், போட்டி, பந்தயம், ரேஸ், மது, மாது, சூதாட்டக்களங்கள், கிளப் நடத்துதல், சமூக சீர்திருத்த அமைப்புக்கள் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்கள்.

### ராகு ஆதிக்கத் தினரின் அதிர்ஷ்ட நாட்கள்

1, 10, 19, 28 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாட்களாகும். 28 ஆம் திகதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தருவதில்லை. சந்திரனும் சனியும் ஆக 2ஆம் 8 ஆம் சேர்ந்திருப்பதால் முழுமையான வெற்றி கிடைப்பதில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1,10,19 ஆம் திகதிகள் அதிர்ஷ்ட தினங்களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் கூட்டு எண் 1 வரும் நாட்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும்.

மேற்கண்ட நாட்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக்கூடிய காரியங்களைக் கூட்டு எண் 1 வரும் நாட்களில் செய்து வர வேண்டும். அதே நேரத்தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

(தொடரும்....)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

18



எல்லாளன் – துட்டகாமினி நடத்திய போர்.

> “இலங்கைக்கு பௌத்தமதம் வருகை தரும்போது, மன்னனாக இருந்த தேவநம்பியதிஸ்ஸ மன்னனுடைய வரலாறும் அதன்பின்னர் வருகின்ற துட்டகாமினி வரலாறும் பல அத்தியாயங்களில் இடம் பெறுகின்றன. இதற்கு முக்கிய காரணம், இவர்கள் இருவரும் மகா விகாரையை ஆதரித்ததோடு இலங்கையில் பௌத்த மதம் வேரூன்றி நிலைக்க ஆரம்ப கர்த்தர்களாகவும் இருந்தவர்கள்”

ஏற்கனவே அறிமுக உரையில் குறிப்பிட்டதுபோல், தமிழர் கி.பி பதினேழாம் நூற்றாண்டிலிருந்து தான் தமது வரலாற்றை எழுதும் மரபைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றார்கள். அதுவும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டை உள்ளடக்கிய வரலாறாக சிறப்பாக கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து, யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய வரலாற்றை உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. இருந்தும் இந்நூல்கள் வன்னிப் பிரதேசம், திருகோணமலை பற்றிய சில வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியபோதும், முழுமைத் தமிழர் பிரதேசங்கள் பற்றிய தெளிவான வரலாற்று நிகழ்வுகளை உள்ளடக்கவில்லை. அத்தோடு முன்னுரையில் குறிப்பிடப்பட்டது போல ஆரம்பகால தமிழ் வரலாற்று நூல்களின் நம்பகத்தன்மைகளும் கேள்விக் குறியாகவே அறிஞர்களால் கொள்ளப்படுகின்றது.

எனவே, வரலாற்றுக் காலத் தமிழர் வரலாறு பற்றி அறிய, புராதன பாளி நூல்களிலும் தமிழ் நாட்டு சங்க இலக்கியங்களிலும் பிறநாட்டவர் எழுதிவைத்த குறிப்புகளிலும் இதுவரை வெளிக் கொணரப்பட்ட தொல்லியல், கல்வெட்டுச் சான்றுகளிலுமே சில வரலாற்றுக் குறிப்புகளை மிக அரிதாக காணமுடிகிறது. இவைகளுள், தமிழ்ப் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளினூடாகவும் அகழ்வாராய்வுகளினூடாகவும் கிடைத்துள்ள சான்றுகளே தமிழர்களின் ஆதிகால வரலாற்றைப் பற்றி அறிய உதவும் முக்கிய சான்றுகளாக உள்ளன.

ஏற்கனவே கூறியதுபோல், இலங்கையின் ஆரம்பகால வரலாறு பற்றி அறிய முனையும் போது, மிக முக்கியமாக வரலாற்றில் இடம் பெறுவது அநுராதபுர இராச்சியம் பற்றிய வரலாறாகும். அதற்குரிய முக்கிய காரணம் பாளி நூலாகிய மகாவம்சம் ஆகும். இந்நூல் எழுதப்பட்ட பின்னணியை விளக்கிக் கொள்வதன் மூலம், இலங்கையின் ஆரம்பகால வரலாறு ஏன் ஒரு பௌத்த சிங்கள வரலாறாக மட்டும் எழுதப்பட்டது என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இந்நூல் எழுதப்பட்ட காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டுக் காலப் பகுதி எனப் பொதுவாக அறிஞர்கள் கருதுவர். இந்நூலை எழுதியவர் மகாநாமதேரர் என்னும் பௌத்த பிக்கு ஆவார். இந்நூல் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டபோதும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து முந்திய சுமார் 10 நூற்றாண்டுகால வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மகாவம்வசம் ஒரு வரலாற்று நூல் என வரலாற்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும், அந்நூலில் கி.மு. 300களைத் தொடர்ந்து வருகின்ற பல வரலாற்றுச்

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

செய்திகளை, பிற கல்வெட்டு, இலக்கிய ஆதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது சில நம்பகத்தன்மைகளை மகாவம்சம் கொண்டிருக்கின்றது என்பதையும் மறுப்பதிற்கில்லை.

இந்நூலின் அடிப்படை நோக்கம், பௌத்த மதத்தின் முக்கியத்துவத்தினை அக்கால மக்களின் தேவை கருதி அவர்களின் ஆன்மீக திருப்திக்காக எழுதப்பட்டது என்பதை இந்நூலின் ஆசிரியரே இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மகாநாமதேரர், அநுராதபுரத்தில் அக்காலப்பகுதியில் பிரபல்யம் வாய்ந்து விளங்கிய பௌத்த நிறுவனமாகிய மகாவிகாரை என்ற பௌத்த பள்ளியைச் சேர்ந்தவராகையால், அவர் எழுதிய மகாவம்சமும் முழுக்க முழுக்க மகா விகாரையை மையப்படுத்தி எழுதப்பட்ட ஒரு தலபுராணமாகவே காணப்படுகின்றது. ஏற்கனவே மகாவம்சம் குறிப்பிட்டது போல, முன்பிருந்து பேணப்பட்ட மரபுகளின் உதவியுடன் இலங்கையில் பௌத்த சங்கத்தார், பௌத்த வரலாற்றை ஒழுங்கு முறைப்படுத்தி அதைப் பேணுவதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

இவ்வாறு பேணப்பட்ட வரலாற்றைக் கூறும்போது, அதற்கு ஒரு கால அடித்தளத்தைக் கொடுப்பதற்காகவும் பௌத்த சங்கம் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற ஆதரவை வரலாற்றில் சேர்த்துக் கொள்வதற்காகவும் பௌத்தம் தொடர்பான நிகழ்ச்சிகளுடன் பக்கம் பக்கமாக மன்னர் பற்றிய குறிப்புக்கள், மற்றும் மன்னர் வழங்கிய ஆதரவு பற்றிய செய்திகள் ஆகியவை எழுதிவைக்கப்பட்டன. இத்தகைய "வங்ஸ" நூலொன்றில் நாட்டின் வரலாற்றினை எடுத்துரைக்கும் நோக்கம் இருக்கவில்லை.

இதன் அடிப்படையில் நோக்கும் போது மகாவம்சம், சிறப்பாக பௌத்தமதம் சம்பந்தமாக எழுதப்பட்ட நூலென்பதை அறியமுடிகின்றது. இருந்தும் இந்நூலில், இலங்கைக்கு பௌத்தமதம் வருகை தரும்போது, மன்னனாக இருந்த தேவநம்பியதிஸ்ஸ மன்னனுடைய வரலாறும் அதன்பின்னர் வருகின்ற துட்டகாமினி வரலாறும் பல அத்தியாயங்களில் இடம் பெறுகின்றன. இதற்கு முக்கிய காரணம், இவர்கள் இருவரும் மகாவிகாரையை ஆதரித்ததோடு இலங்கையில் பௌத்த மதம் வேரூன்றி நிலைக்க ஆரம்ப கர்த்தர்களாகவும் இருந்தவர்கள் என்பதாகும்.

இவை தவிர, வேறுபல மன்னர்கள் பற்றிய செய்திகளும் இந்நூலில் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது. அம் மன்னர்கள், ஏதோ விதத்தில் பௌத்த மதத்திற்கு உதவியவர்களாகவும் பௌத்தமதம் சார்ந்தவர்களாகவும் இருந்ததே இதற்கு காரணம். மேலும், தேவநம்பிய திஸ்ஸ மன்னனே முதலில் பௌத்த மதத்தைத் தழுவி அநுராதபுர அரசின் மன்னாக முடி சூடியவனாவான். அதற்கு முந்திய காலப்பகுதியாகிய கி.மு.300களிலிருந்து கி.மு. 500கள் வரையுள்ள காலப்பகுதிகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

அந்த 200 ஆண்டு காலப்பகுதியில் தான் விஜயன் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் தம்பபன்னியில் இறங்கி, அங்கு சில காலம் ஆட்சி செய்து விட்டு, பின்னர் அநுராதபுர மன்னனான வரலாறு இடம் பெறுகின்றது. இப்பகுதி வரலாற்றை முழுக்க, முழுக்க வெறும் ஐதீகங்களின் அடிப்படையில் புனையப்பட்ட வரலாறாகவே வரலாற்று ஆசிரியர்கள் கொள்வர்.

அதனால் விஜயன் வருகைபற்றி மகாநாம தேரர் இந்நூலில் கூறிய செய்திகளுக்கு எதுவித ஆதாரங்களும் இல்லை என்பதே உண்மையாகும். அத்தோடு இக் குறிப்பிட்ட காலத்தில், பௌத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரே தன் போதனைகள் எதிர்காலத்தில் நிலைக்கும் இடமாக இலங்கையைத் தெரிந்து, மும்முறை இங்கு வருகைதந்த வரலாறும், அவர் பரிநிர்வாணம் அடைந்தபின் அவருடைய மதத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய செய்திகளும் மகிந்தர் தனது சகாக்களுடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பௌத்த மதத்தை நிலைபெறச் செய்த விடயங்களும் மகாவிகாரை நிறுவப்பட்ட சம்பவங்களும் முக்கியமாக இடம் பெறுகின்றன.

இவ்வாறான பின்னணியில் மகாவம்சம் என்னும் நூலை நோக்கின், அந்நூல் அநுராதபுரம் இராச்சியம் தொடர்பான, பௌத்த மதத்தைக் கருப்பொருளாகக் கொண்டுள்ள நூலே தவிர, அது ஆரம்பகால இலங்கை வரலாற்றைக் கூறுகின்ற ஒரு முழுமையான நூல் அல்ல என்பது புலப்படுகிறது.

ஆனால் தேவை கருதி, இந்நூலில் தமிழ் மன்னர்கள் பற்றியும், தென்னிந்திய குறிப்பாக, தமிழ் நாட்டு அரசுகளின் தொடர்புகள் பற்றியும், அநுராதபுரம் தவிர்ந்த ஏனைய சில பிரதேசங்கள் பற்றியும் ஆங்காங்கே குறிப்பிடப்படுவதையும் காணமுடிகின்றது. அவ்வாறான குறிப்புகளில் முக்கிய அம்சமாக, இற்றைக்கு 2100 வருடங்களுக்கு முன் அநுராதபுர இராச்சியத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னனாகிய எல்லாளன் பற்றியும், எல்லாள மன்னன் ஆட்சிக்கு முன்னர் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த சேன, குத்திக என்னும் தமிழ் மன்னர் களைப் பற்றியும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவமும்



கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

எம்.எம். வெத்தர்பேர்ன் ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயம் - 1933:- டொன்மூர் அரசியலமைப்பின்படி 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி றொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு 50 ஆசனங்களை ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்தது என்பதையும் அவ்வெல்லை நிர்ணயத்தின்படியே 1931ஆம் மற்றும் 1936ஆம்ஆண்டுத் தேர்தல்கள் நடந்ததென்பதையும் முன்னைய கட்டுரையில் பார்த்தோம். 1931 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் பொதுமக்களிடையே றொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக கருத்திருந்ததால், 1936ஆம் ஆண்டுத்தேர்தலுக்கு முன்னர் இவ் 50 தேர்தல் தொகுதிகளினதும் எல்லைகளில் ஏதாவது மாற்றம் செய்யப்படவேண்டுமா என்பதைப் பரிசீலிப்பதற்கு 1933ஆம் ஆண்டு எம்.எம். வெத்தர்பேர்ன் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அது எல்லைகளைப் பரிசீலித்து எல்லைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை தனது அறிக்கையின் மூலம் ஜுலை 1935 இல் சமர்ப்பித்தது.

இக் குழுவின் எல்லை நிர்ணயத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தேர்தல் தொகுதிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இருந்தும் மட்டக்களப்பு மக்களின் வேண்டுதலுக்கு ஏற்ப கிழக்கு மாகாணத்திலிருந்த திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து திருகோணமலையை பிரித்து மட்டக்களப்புக்கு இரு தேர்தல் தொகுதிகளைக் கொடுப்பதோடு திருகோணமலையை அநுராதபுர தேர்தல் தொகுதியுடன் அல்லது மன்னார்- முல்லைத்தீவு தேர்தல் தொகுதியுடன் இணைக்க எண்ணியிருந்ததும் அவ்வெண்ணம் பின்னர் கைவிடப்பட்டதும் குறிப்பித்தக்கதாகும்.

**சோல்பரி அரசமைப்பு**

டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இலங்கை மக்கள் பொதுவாக திருப்தியடையவில்லை. பூரண பொறுப்பாட்சி இலங்கை மக்களுக்கு வழங்கப்படாமை, ஆளுநரது விசேட அதிகாரங்கள் மற்றும் அமைச்சர்களைத் தெரிவு செய்யும் முறை ஆகிய விடயங்கள் கண்டனத்துக்குள்ளாகின. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை சிறுபான்மைச் சமூகத்தினரிடையே ஒருவித அச்சத்தை உண்டாக்கியது.

1936ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் தமிழர்களில்லாத சர்வ சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டது. இச் சம்பவத்திற்கு முன்பு சிறுபான்மைச் சமூகத்தவர்கள் தம்மில் அமைச்சராக ஒன்று அல்லது இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய சந்தர்ப்பமிருக்கிறதென்று எண்ணியிருந்தனர். ஆனால் இவ் அமைச்சரவை, இதுவரையும் எண்ணியிருந்தது தவறென அவர்களுக்கு எடுத்துக் காட்டிற்று. ஆகவே சிறுபான்மைச் சமூகத்தவர்கள், தங்கள் நிலைமையைப் பாதுகாக்க வேறுவழியை கடைப்பிடிக்க வேண்டுமென எண்ணலாயினர்.

இதன் காரணமாகத்தான் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோஷம் எழுந்தது. பாராளுமன்ற பிரதிநிதிகளின் தானங்களைச் சரிபாதியாகச் சிங்களவருக்கும் சிறுபான்மையோருக்குமிடையே பிரித்தல் (**Balanced Representation**) அல்லது வேறு ஏதாவது முறைப்படி வகுப்பு வாரியாகப் பிரதிநிதித்துவம் அளித்தல் என் பது தான் இந்த ஐம்பதுக்கு ஐம்பதின் தத்துவம். மேலும் டொனமூர்த் திட்டம் நடைமுறைக்கு வந்த காலம் தொடக்கம் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்ததோடு இனத் துவேஷமும் வளர்ந்து வரலாயிற்று. ஒவ்வொரு இனத்தவரும் மற்ற இனத்தவர் மீது சந்தேகம் கொண்டனர்.

டொனமூர் ஆணைக்குழு, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தைச் சிபாரிசு செய்தபோது, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் வகுப்புவாத மனப்பான்மையை ஒழிக்குமெனக் கருதியது. ஆனால் அக் கருத்து பிழையானதெனப் பின்பு நடந்த சம்பவங்கள் புலப்படுத்தின. ஏனெனில் தமிழர் அதிகமாக வாழும் வட, கீழ் மாகாணங்களில் ஒரு சிங்களவரோ அன்றேல் தென் மாகாணத்தில் ஒரு தமிழரோ தேர்ந்தெடுக்கப்படவில்லை. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மையினரைப் பாதித்ததால் அவர்கள் அதனைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

சோல்பரி ஆணைக்குழு சிறுபான்மையினரின் விரக்தியை கருத்தில் எடுத்துக் கொண்ட போதும் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பதின் தத்துவத்தைக் கணக்கில் எடுக்காமல் சிறுபான்மையினருக்கு சில பாதுகாப்புக்களுடன் கூடிய பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை சிபாரிசு செய்து, அதன்படி தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென தகவுரை செய்தது.

**எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக் குழுவும் அதன் கடமைகளும் பொறுப்புக்களும்**

இலங்கை மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் நோக்கோடு சோல்பரி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தம்- 1946 நடைமுறைக்கு வந்ததோடு, 1946 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அன்றைய அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின் பகுதிகள் IV மற்றும் IX களில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் விதந்துரைக்கப்பட்டிருந்தன.

அவையாவன, எல்லை நிர்ணய ஆணைக்குழு அங்கத்தவர்கள் அரசியற் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும். இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றையும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் கடமை இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப் பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும். தேவையானவிடத்து பல் அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கவேண்டும். இனங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்காக மாகாண மட்டத்தில் 1931 ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் 75,000க்கு கிட்டிய மக்களை கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் மாகாண அடிப்படையில் ஒவ்வொரு 1000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்திற்கு ஒரு பிரதிநிதியை வழங்கும் பொருட்டு தொகுதிகளைப் பிரித்தல் வேண்டும் என்பனவாகும்.

இதன்படி மாகாணத்தின் விஸ்தீரணத்தை மூலதாரமாகக் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்ட போது மாகாணத்துப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம்-1, மத்திய மாகாணம்-2, தென் மாகாணம்-2, வட மாகாணம் -4, கீழ் மாகாணம்-4, வடமேல் மாகாணம்-3, வட மத்திய மாகாணம்-4, ஊவா மாகாணம்-3 மற்றும் சப்ரகமுவ மாகாணம்-2. மொத்தம் -25.

விஸ்தீரணம் மற்றும் சனத் தொகை அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம்-20, மத்திய மாகாணம்-15, தென் மாகாணம் -12, வட மாகாணம்-9, கீழ் மாகாணம்-7, வடமேல் மாகாணம்-10, வட மத்திய மாகாணம்-5, ஊவா மாகாணம்-7 மற்றும் சப்ரகமுவ மாகாணம்-10. மொத்தம் -95. (அட்டவணை-1)

அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின் பகுதிகள் IV மற்றும் IX களில் மேலும் சில கடமைகளும் பொறுப்புக்களும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு விதந்துரைக்கப்பட்டிருந்தன. அவையாவன, மாகாண மட்டத்தில் பல அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டாலும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 95 ஆக இருத்தல் வேண்டும். இவ் வரம்புகளை மீறாது புவியியல் அம்சங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை கருத்தில் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தேர்தல் தொகுதிகளுக்குப் பெயரிடல் என்பனவாகும்.

எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்குஎல்.எம். டி. த. சில்வா (தலைவர்), என். நடராசா (உறுப்பினர்) மற்றும் எச்.ஈ. ஜான்ஸ் (உறுப்பினர்) ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அன்றைய காலத்தில் இலங்கையிலிருந்த தேர்தல் முறையானது ஒப்பிடுகையில் பெரும்பான்மை அடைந்தவர் (**First Past the Post-FPP**) வெற்றி பெறும் முறையாகும். அதாவது ஒரு தேர்தல் தொகுதியில் கூடுதலான வாக்குகள் பெற்றவர் வெற்றிபெற்றவராவார்.

ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப் பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இக் குழுவினால் 5 பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணிதமுறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத் தொகுதியிலுள்ள சனத்தொகை/ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 34 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன.

**அட்டவணை:-1**

| மாகாணம் | விஸ்தீரணம்-சதுரமைல்கள் | சனத்தொகை-1931 | தொகுதிகள் எண்ணிக்கை | சனத்தொகை-1946 |
|---|---|---|---|---|
| மேல் | 1422 | 1,448,648 | 20 | 1822413 |
| மத்திய | 2191 | 953,395 | 15 | 1108169 |
| தென் | 2141 | 771,283 | 12 | 941982 |
| வட | 3430 | 399,094 | 9 | 470713 |
| கீழ் | 3859 | 213,980 | 7 | 261824 |
| வடமேல் | 3046 | 546,988 | 10 | 650741 |
| வட மத்திய | 4043 | 97,365 | 5 | 136148 |
| ஊவா | 3300 | 303,419 | 7 | 365692 |
| சப்ரகமுவ | 1918 | 578,368 | 10 | 726727 |
| மொத்தம் | 25,350 | 5,312,540 | 95 | 6484409 |

இதேபோல் மூன்று அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணிதமுறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத் தொகுதியிலுள்ள சனத்தொகை/ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 26 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன. இவற்றை கருத்தில்கொண்டே இவ் ஐந்து பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட தொகுதிகள் பின்வருமாறு. மத்திய கொழும்பு-3 அங்கத்தவர்கள் தொகுதி, அம்பலாங்கொடை-பலப்பிட்டிய, பலாங்கொடை, கடுகண்ணாவை மற்றும் பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள். மற்றவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஆகும். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் 95 பிரதிநிதிகளும் 89 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேற்கூறிய அடிப்படையில் மாகாண மட்டத்தில் தேர்தல் தொகுதிகள் பின்வருமாறு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டன . மேல் மாகாணம்-18, மத்திய மாகாணம்-14, தென் மாகாணம்-11, வட மாகாணம்-9, கீழ் மாகாணம்- 7, வடமேல் மாகாணம்-10, வட மத்திய மாகாணம்-5, ஊவா மாகாணம்-6 மற்றும் சப்ரகமுவ மாகாணம்-9. மொத்தம் -89.

**வட மாகாணத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகள்**

நெடுந்தீவுப் பிரிவு மற்றும் தீவுகளை உள்ளடக்கிய ஊர்காவற்றுறைத் தொகுதி, வலிகாமம் மேற்குப்பிரிவை உள்ளடக்கிய வட்டுக்கோட்டைத் தொகுதி, வலிகாமம் வடக்குப்பிரிவை உள்ளடக்கிய காங்கேசன்துறைத் தொகுதி, யாழ்ப்பாணப் பிரிவின் ஒருபகுதியையும் (சுண்டிக்குளிப் பிரிவு) யாழ்ப்பாண நகர சபையையும் உள்ளடக்கிய யாழப்பாணத் தொகுதி, யாழ்ப்பாணப் பிரிவின் ஒருபகுதியையும் (கொக்குவில் பிரிவு, நல்லூர் மற்றும் வண்ணார்பண்ணைப் பிரிவுகளின் பகுதிகள்) மற்றும் வலிகாமம் கிழக்குப்பிரிவை உள்ளடக்கிய கோப்பாய்த் தொகுதி, வடமராட்சிப்பிரிவை உள்ளடக்கிய பருத்தித்துறைத் தொகுதி, தென்மராட்சிப்பிரிவு, பச்சிலைப்பள்ளி-கரைச்சிப் பிரிவு மற்றும் பூநகரி-துணுக்காய்ப் பிரிவை உள்ளடக்கிய சாவகச்சேரித் தொகுதி, மாந்தை, மன்னார் மற்றும் முசலிப் பிரிவுகளை உள்ளடக்கிய மன்னார்த் தொகுதி, வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு, வவுனியா தெற்கு சிங்களப்பிரிவு, வவுனியா வடக்குப்பிரிவு, கரைதுறைப்பற்றுப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய வவுனியாத் தொகுதி என்பனவாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சீரற்ற காலநிலையால் 46 குடும்பங்கள் தற்காலிக முகாம்களில்







(ஹற்றன்)

மலையகத்தில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் ஹற்றன் மற்றும் நுவரெலியா பகுதிகளில் 46 குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஹற்றன் டிக்கோயா எட்லி தோட்டத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் மண்சரிவு அபாயம் காரணமாக எட்லி தோட்ட தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக பாதுகாப்புக் கருதி தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவு தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மண்சரிவு காரணமாக அத்தோட்டத்தின் 13 ஆம் இலக்க தொடர் குடியிருப்பில் வாழும் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் இடம்பெயர்ந்து எபஸ்போட் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து இடைக்கிடையே பெய்து வரும் கன மழை காரணமாக அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா போன்ற பிரதேசங்களில் மண்சரிவுகள், வீதி விபத்துக்கள் என இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ள இலங்கையில் 7இலட்சம் பேர் காத்திருப்பு

## வைத்திய நிபுணர் சுனில் அபேசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுமாயின் அந்த நாடு சுகாதாரத் துறையில் ஆகக்கூடிய வளர்ச்சியைக் கண்ட நாடாக பாராட்டப்படும் என்று விசேட சத்திர சிகிச்சை வைத்தியர் அனில் அபேசேகர தெரிவித்தார். இலங்கையில் அரச வைத்தியசாலைகளில் இவ்வாறான சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

இலங்கையில் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ள சுமார் 7 இலட்சம் பேர் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இவ்வாறான சத்திர சிகிச்சையை 3 ஆயிரம் பேருக்கு மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இத்தகைய சத்திர சிகிச்சைகளுக்கு வெளிநாடுகளில் ஆகக்குறைந்தது 20 கோடி ரூபா செலவிடப்பட வேண்டியுள்ளது என அனில் அபேசேகர தெரிவித்தார். இந்த சத்திர சிகிச்சைக்குத் தேவையான வளங்கள், உபகரணங்கள், மருந்துகளுக்காக அரசாங்கம் குறைவின்றி நிதியை வழங்குகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கருத்து வெளியிடுகையில், விசேட சத்திர சிகிச்சை வைத்தியர் அனில் அபேசேகர இந்நாட்டில் வெற்றிகரமாக இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் எனத் தெரிவித்தார்.

பாரிய அளவில் அர்ப்பணிப்பை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்து இந்த சத்திர சிகிச்சைப் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் பாராட்டினார். வெற்றிகரமான இருதய சத்திர சிகிச்சையை மேற்கொண்ட அநுராதபுரத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி டபிள்யூ. ஜி.என். ஜி.புஷ்பகுமாரியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நடிகையிடம் ரூ.10 இலட்சம் மோசடி

## திரைப்பட இயக்குநர் கைது

(கொழும்பு)

இலங்கையின் பிரபல நடிகையான என்டலீன் ரொஷானாவிடம் பாரிய நிதி மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜப்பானில் தயாரிக்கும் சொகுசு ரக மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்து தருவதாக கூறி, 10 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட திரைப்பட இயக்குநர் நேற்று முன்தினம் மிரிஹான விசேட பொலிஸ் குற்றப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

10 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடியான முறையில் ஏமாற்றப்பட்டதாக கூறி குறித்த நடிகை மிரிஹான பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் மேல் மாகாண பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வசந்த விக்கிரமசிங்க குறித்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து விசாரணை மேற்கொண்டு குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 160 | 200 | 200 |
| தக்காளி | 80 | 80 | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 140 | 140 | 80 | 160 | 160 |
| கரட் | 200 | 400 | 250 | 400 | 400 |
| பூசணி | 60 | 70 | 55 | 100 | 100 |
| புடோல் | 60 | 70 | 40 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 200 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 80 | 150 |
| லீக்ஸ் | 140 | 100 | 95 | 120 | 150 |
| பீற்றூட் | 60 | 80 | 90 | 120 | 140 |
| கறிமிளகாய் | 150 | 180 | — | 200 | 250 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 35 | 120 | 30 |
| போஞ்சி | 200 | 200 | — | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 50 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 35 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 30 | 60 | 50 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 140 | 150 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 100 | 200 | 100 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 20 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | [illegible] | 120 | 80 | 50 |

# செய்தித்துளிகள்

## இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் (III) இற்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 18.08.2018 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## தபால்மா அதிபராக ரஞ்சித் ஆரியரத்ன

(கொழும்பு)

பொலநறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன புதிய தபால்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## பரு.புலோலியில் மட்டும் 4 மதுபான நிலையங்கள்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி அலுவலகத்திற்குட்பட்ட பகுதியில் மட்டும் நான்கு மதுபான விற்பனை நிலையங்கள் இருப்பதாக பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மதுபானசாலை தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போது புலோலி பகுதியிலேயே அதிகளவாக நான்கு மதுபான சாலைகள் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. (இ-60)



(கேலிச்சித்திரம்)

## மொட்டுக் கட்சியுடன் இணைய மாட்டோம்

### மனோ உறுதி



(கொழும்பு)

தனது கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட எவ்வித முடிவும் எடுக்கவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார். இது தொடர்பாக சில ஊடகங்கள் செய்திகளைத் தெரிவித்திருந்தாலும் அச்செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென அவர் தெரிவித்தார். (இ-7)

## கையடக்க தொலைபேசியுடன் பரீட்சை எழுதிய மாணவன்

(கொழும்பு)


கம்பஹாவிலுள்ள பரீட்சை நிலையமொன்றில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவரொருவர் வசமாக சிக்கிக் கொண்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த மாணவன் நேற்று முன்தினம் கையடக்க தொலைபேசியை உபயோகித்து பரீட்சையை எழுதிய போதே மேற்பார்வையாளரிடம் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பரீட்சை மேற்பார்வையாளரால் மாணவனிடமிருந்து தொலைபேசி பறிக்கப்பட்ட போதும், அன்றைய தினத்திற்கான பரீட்சையை மாணவன் நிறைவு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சுதந்திரதினம் இன்று






'1947, ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி' என்பது ஒவ்வொரு இந்தியரின் வாழ்விலும் நினைவிலும் நிற்கும் தினமாகக் கருதப்படுகிறது. அந்நாள், புதிய தேசத்தின் உதய நாள்' மற்றும் 'ஒரு புதிய தொடக்கத்தின் தொடக்க நாள்' என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால் இறையாண்மை கொண்ட நாடாகத் திகழும் இந்தியாவின் சுதந்திரம் என்பது நூற்றுக்கணக்கான ஆன்மாக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான புரட்சியாளர்கள் மற்றும் தலைவர்களின் வெற்றி நாள் என்று பெருமையுடன் தலைநிமிர்ந்து சொல்லலாம்.

சுதந்திரம் என்ற ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு தமது இன்னுயிரையும் துறந்த மகான்களின் தியாக உள்ளங்களையும் நினைவு கூரலாம்.

சுதந்திரத்திற்காகப் போராடிய பல தலைவர்களும் புரட்சியாளர்களும் தள்ளாடும் வயதைக் கடந்துகொண்டிருக்கும் வேளையில், சுதந்திரத்தைப் பற்றியும் அதன் வரலாற்றைப் பற்றியும் அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம்.

விஜயநகரப் பேரரசு காலத்தில், இந்தியாவிற்குக் கடல் வழியாக முதன்முதலில் வந்தவர்தான் வாஸ்கொடகமா. 'வந்தோரை வாழவைக்கும் நாடெங்கள் நாடு' என்ற பெருமை இந்தியாவிற்குத் தொடக்கத்திலிருந்தே உள்ளது. ஒரு போர்ரத்துக்கீசரான அவர், கடல் வழியே இந்தியாவிற்கு வழியைக் கண்டுபிடித்து, இந் நாட்டில் கால் பதித்தார். இவரது வருகையைத் தொடர்ந்து இந்தியாவில் உணவுக்கு சுவை சேர்க்கும் கறி மசாலா பொருட்கள் இருப்பதை



அறிந்த ஐரோப்பியர்கள், அதைத் தங்களது நாடுகளுக்கு விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட எண்ணி, கோழிக்கோடு துறைமுகத்தில் 1498 ஆம் ஆண்டு வந்திறங்கினர். இதுவே, பண்டமாற்று முறைக்கு வித் திட்டது. போர்த்துக்கீசர்கள் இந்தி யாவின் கடலோரப் பகுதிகளான கோவா, டியூ, டாமன் மற்றும் மும்பை போன்ற இடங்களில் தங்களது வணிக முகாம்களை அமைத்தனர். இவர்களைத் தொடர்ந்துடச், ஆங்கிலேயர்கள் போன்ற அந்நிய நாட்டவர்கள் இந் நாட்டிற்கு வருகை தந்ததால் அவர்களும் போர்த்துக்கீசர்கள் போலவே வணிக முகாம்களை அமைக்க எண்ணி, சூரத்தின் வடக்கு கரையோரத்தில் நிறுவினர். 1619 ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்களும் அவர்களைப்பின் தொடர்ந்தனர். வணிகம் என்ற பெயரில் ஒவ்வொரு நாட்டுக்குளளும் நுழையும் ஐரோப்பியர்கள், நாட்கள் செல்லச் செல்ல அந் நாட்டின் சிம்மாசனப் பொறுப்பைக்கைப் பற்றுவர். அதற்கேற்றவாறு பல நாட்டவரும் இந்தியாவுக்குள் நுழைந்ததால் பல போர்களும் குழப்பங்களும் நிலவியதால் ஐரோப்பியர்கள் அரசியல் ஆதிக்கத்தை செலுத்த ஆரம்பித்தனர். ஆனால், தாங்கள் கைப்பற்றிய அனைத்து நாடுகளையும் ஒரே நூற்றாண்டில் ஆங்கிலேயர்களி டம் இழந்தனர்.

சுதந்திரத்திற்காகப் பல போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் எழுப்பிய தலைவர்களும் புரட்சியாளர்களும் சிறிதளவு கூட களைப்படையவில்லை. ஆனால், பிரித்தானிய மக்களும் பிரித்தானிய இராணுவமும் இந்தியாவில் மென்மேலும் அடக்கு முறையை ஏற்படுத்துவதற்கு விருப்பமற்றிருந்தது.

1947 ஆம் ஆண்டில், பிரித்தானிய இந்திய ஆளுநர் ஜெனரலான விஸ்கவுண்ட் லூயி மவுண்ட்பேட்டன் ஜூன் 3 ஆம் திகதியன்று 'பிரித்தானிய இந்தியப் பேரரசை மதச்சார்பற்ற இந்தியா' என்றும், 'முஸ்லிம் பாகிஸ்தான்' என்றும் பிரித்தளிப்பதாக அறிவித்தார்.

இந்தத் தேசப் பிரிவினையால் 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி பாகிஸ்தான் தனித் தேசமாக பிரிந்து சென்றது.

மேலும், இந்தியா 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி நள்ளிரவில் சுதந்திர தேசமானது.

சுதந்திர இந்தியாவின் பிரதமராக ஜவஹர்லால் நேருவும் துணைப் பிரதமராக சர்தார் வல்லபாய் படேலும் பதவியேற்றனர். அவர்கள் இந்தியாவின் கடைசி ஆளுநர் ஜெனரலாக இருந்த மவுண்ட்பேட்டனை அதே பதவியில் தொடரும்படி அழைத்தனர். அவர்களது அழைப்பை ஏற்ற அவரும், சிறிது காலம் பதவியில் இருந்தார்.

பின்னர் 1948 ஆம் ஆண்டு ஜூனில் சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரி அவருக்கு பதிலாக அமர்த்தப்பட்டார்.

## சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்

ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி இந்திய நாடு முழு வதும் சுதந்திர தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேசியக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, மாணவர்களுக்கு இனிப்பு வழங்கிய பின்னர் விடுமுறை அளிக்கப்படும்.

இன்று டில்லியில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் இத்தினத்தில், நாட்டின் பிரதமர் செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, மக்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து, உரையாற்றுவார். இவ் விழாவில், முப்படை அணி வகுப்பு, நடனம்; நாட்டியம் எனப் பல்வேறு வண்ணமயமான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இந்தியாவின் ஒவ்வொரு பிரஜைக்கும் முக்கியமான தினம் என்பதால், இந்தியப் பிரஜைகள் அனைவரும் தங்களது வாழ்த்துகளை இந்நாளில் தங்களது பிரியமானவர்களிடம் பகிர்ந்து கொள்வார்கள்.

---




❖ 1947 - இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்று பொதுநலவாய அமைப்பின் கீழ் தனி நாடாகியது. ஜவகர்லால் நேரு முதலாவது தலைமை அமைச்சர் ஆனார்.

❖ 1977 - இலங்கையில் தமிழருக்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கையான 15.08-17.08 ஆவணிப்படுகொலை தொடங்கிய நாள். இந்த இனப்படுகொலையின் பின்னர் தான்... நிராயுதபாணியாக நின்ற தமிழர்களை நோக்கி "போர் என்றால் போர்... சமாதானம் என்றால் சமாதானம்" என்று கொக்கரித்தார், சிங்கள பேரினவாதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இவ் இனவெறியில் 400 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

❖ 1882 - சி. ஆர். நாராயண் ராவ், இந்திய விலங்கியல் மருத்துவர் (இ. 1960)

❖ 1883 - வ. சு. செங்கல்வராய பிள்ளை, தமிழறிஞர் (இ. 1971)

❖ 1892 - தி. வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் வரலாற்றாளர் (இ. 1960)

❖ 1900 - ந. பிச்சமூர்த்தி, தமிழக எழுத்தாளர்(இ. 1976)

❖ 1921 - கா. கைலாசநாதக் குருக்கள், ஈழத்து இந்து ஆய்வாளர், பேராசிரியர் (இ. 2000)

❖ 1922 - கல்பகம் சுவாமிநாதன், தமிழக வீணை இசைக்கலைஞர், பேராசிரியை (இ. 2011)

❖ 1922 - குஷபாவு தாக்கரே, இந்திய அரசியல்வாதி (இ. 2003)

❖ 1930 - சுவாமி தயானந்த சரசுவதி, தமிழக மரபு வழி அத்வைத வேதாந்த ஆசிரியர் (இ. 2015)

❖ 1935 - ராஜசுலோசனா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2013)

❖ 1948 - பாரதி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

❖ 1961 - சுஹாசினி, தென்னிந்திய நடிகை

❖ 1964 - அர்ஜுன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖ 1992 - அதிபன் பாசுகரன், இந்திய சதுரங்க ஆட்ட வீரர்

### இறப்புகள்

❖ 1942 - மகாதேவ தேசாய், இந்திய செயற்பாட்டாளர், நூலாசிரியர் (பி. 1892)

❖ 2013 - செல்லையா பொன்னுத்துரை, இலங்கையின் துடுப்பாட்ட நடுவர் (பி. 1935)

### சிறப்பு நாள்


❖ இந்தியாவின் சுதந்திர தினம் (1947)

❖ விடுதலை நாள் (தென் கொரியா, வடகொரியா, 1945 இல் ஜப்பானிடம் இருந்து)

❖ விடுதலை நாள் (கொங்கோ குடியரசு)

---

## மகாத்மா காந்தி



✦ மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாக 1869 ஒக்டோபர் 2 இல் பிறந்தார். மகாத்மா காந்தியாக 1948 ஜனவரி 30 இல் மறைந்தார். காந்தியின் பிறந்தநாள் உலகம் எங்கும் சர்வதேச அகிம்சை தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது!

✦ காந்தி பிறந்த ஒக்டோபர் 2 ஆம் திகதி நாட்டின் மூன்றாவது மற்றும் இறுதி தேசிய விடுமுறை, குடியரசு தினம், சுதந்திரம் தினம் ஆகியவை மற்ற இரண்டு விடுமுறைகள்!

✦ முதன்முதலில் 'தேசத்தந்தை' என்று காந்தியை அழைத்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், 'மகாத்மா' என்று அழைத்தவர் ரவீந்திரநாத் தாகூர்!

✦ வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் போது, காந்தி சொன்ன வாக்கியம்தான்..... 'செய் அல்லது செத்து மடி!'

✦ கொள்கை இல்லாத அரசியல், வேலை செய்யாமல் வரும் செல்வம், மனச்சாட்சியை ஏமாற்றி வரும் இன்பம், பண்பு இல்லாத அறிவு, நியாயம் இல்லாத வணிகம், மனிதம் மறந்த அறிவியல், தியாகம் இல்லாத வழிபாடு இவை காந்தி குறிப்பிட்ட ஏழு சமூகப் பாவச் செயல்கள்!

✦ எந்த நிலையிலும் ஆங்கிலேயரை உடல் அளவில் காயப்படுத்துவதை அவர் அனுமதிக்கவில்லை. 'நாம் அவர்களை எதிர்த்துப் போராடவில்லை. அவர்கள் நம்மீது திணிக்கும் அதிகாரத்தைத்தான் எதிர்க்கிறோம்' என்று அதற்கு விளக்கமும் அளித்தார்!.

✦ தான் தவறு செய்தால், அதற்காக மௌன விரதம் ஏற்பதும்... பிறர் தவறு செய்தால், அந்தத் தவறு செய்தவர் அதை உணர தான் உண்ணாவிரதம் இருப்பதையும் வாடிக்கையாகக்கொண்டிருந்தார். இந்த குணம், அவர் தாய் புத்தலிபாயிடம் இருந்து வந்ததாகும்!.

✦ இந்தியா சுதந்திரம் அடைந்த போது, அதைக் கொண்டாட மறுத்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் காந்தி, இன்னொருவர் தந்தை பெரியார்!.

✦ 'கனவில் இருந்து நிஜத்துக்கு, இருளில் இருந்து வெளிச்சத்துக்கு, மரணத்தில் இருந்து அமரத்துவத்துக்கு!'- காந்தி நினைவு மண்டபத்தில் எழுதிவைக்கப்பட்டு இருக்கும் வாசகம் இது!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிந்திக்கிறேன்.
எனவேதான் நான் வாழ்கிறேன்.
- டெக்கார்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விட்டவன் மதித்தான் பெற்றவன் மிதித்தான்

இந்தியாவின் சுதந்திர தினம் இன்று. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றது. மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தின் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது.

இந்தியாவின் சுதந்திர தினம் மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தால் கிடைத்தது என்பது உண்மையாயினும் அந்த உண்மையின் மறுபக்கம் அகிம்சைப் போராட்டத்தை வெள்ளையர்கள் மதித்தார்கள். எங்கே உண்ணாவிரதமிருந்து காந்தி அடிகள் இறந்துவிடுவாரோ என்று பயந்தார்கள்.

அதன் காரணமாக இந்திய தேசத்துக்கு சுதந்திரத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் முடிவு செய்தனர்.

1947இல் இந்தியாவுக்குச் சுதந்திரத்தை வழங்கிய வெள்ளையர்கள் இனி இலங்கை தமக்குத் தேவையில்லை என்று முடிவு செய்தனர். இதன்காரணமாக 1948 பெப்ரவரி நாலாந் திகதி இலங்கைக்குச் சுதந்திரத்தைக் கொடுத்தார்கள்.

தமக்கு இலங்கை தேவைப்படாது என்று கருதிய பிரிட்டிஷ், இலங்கையை விட்டுவிடும் போது அதை யாரிடம் கொடுக்க வேண்டும். எப்படிக் கொடுக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்காமல் சிங்களவர்களின் கைகளில் இலங்கையைக் கொடுத்துவிட்டு டாட்டா காட்டிச் சென்றனர்.

இவ்வாறு இலங்கையின் சுதந்திரத்தை சிங்களவர்களிடம் கொடுத்தபோது ஐயா! எங்களுக்குத் தனி நாட்டைப் பிரித்துத் தந்து விட்டு போங்கள் என்று சேர் பொன். இராமநாதன் போன்றவர்கள் கேட்டிருந்தால், அன்றே இலங்கை பிரிபட்டு தமிழர்களுக்கான தாயகமும் வரையறை செய்யப்பட்டிருக்கும்.

என்ன செய்வது மிக இலகுவாகக் கிடைக்கக்கூடிய தனிநாட்டைக் கைவிட்டு சிங்களவர்களுடன் சேர்ந்து வாழலாம் என்று தமிழ்த் தலைவர்கள் நினைத்தனர்.

அந்த நினைப்பு தமிழர்களுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நினைக்கும்போதெல்லாம் எங்களிடமும் ஒரு ஜின்னா இருந்திருந்தால், நாங்களும் இப்போது தனிநாட்டவர்களாக இருந்திருப்போம். என்ன செய்வது கர்மவினைப் பயன் எதற்கும் விடவில்லை.

1948இல் பிரிட்டிஷ் அரசு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது, சிங்களவர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக நாங்கள் வாழலாம் என்று பெருந்தன்மையோடு நாம் நினைத்தது ஏலவே 1947இல் சுதந்திரம் பெற்றிருந்த இந்தியாவுக்கும் தெரிந்திருக்கும்.

ஆனால் இன்று இலங்கையில் தமிழினம் படும் பாடு கொஞ்சமல்ல. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை வன்னியில் வைத்துக் கொன்றொழித்த சம்பவம் உலகறிந்த உண்மை.

ஆயினும் தமிழினம் வாழவேண்டும் என்பதில்; இன்று சுதந்திரத்தைக் கொண்டாடும் இந்தியாவும் நினைக்கவில்லை என்பதுதான் மிகப்பெருந் துன்பம்.

ஆம், காந்தியின் உண்ணாவிரதத்துக்கு மதிப்பளித்து வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறியபோது, இலங்கையையும் கையளித்து விட்டுப் போயினர்.

ஆனால் இந்தியாவையும் இலங்கையையும் சுதந்திரத்தின் பெயரால் தமதாக்கிக் கொண்ட சுதேசிகள் அந்த நாட்டுச் சுதேசிகளை மிதிக்கின்றனர் என்றால்,

விட்டவன் மதித்தான்; பெற்றவன் எங்களை மிதித்தான் என்பதுதான், இந்திய தேசத்தின் 71ஆவது சுதந்திரதின நிகழ்வுக்கான ஈழத் தமிழர்களின் வாழ்த்துச் செய்தியாகும்.

# அபிவிருத்திக் கூட்டத்தில் அமைதியின்மை

(அம்பகமுவ)

அம்பகமுவ பிரதேச குழுத் தலைவரும் அம்பகமுவ பிரதேச செயலாளருமான ஆர்.பி.டி.சுமனசேகர மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் ஆகியோருக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் டிக்கோயா கிழங்கன் தோட்ட பகுதியிலுள்ள காணிகளை வெளியாருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் நேற்று முனதினம் இடம்பெற்ற அம்பகமுவ பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே இருவருக்கும் இடையில் இவ்வாறு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது கிழங்கன் பகுதியில் உள்ள காணிகளை வெளியாருக்கு குறித்த பகுதிக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைத்துள்ளமை தொடர்பில் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ், அம்பகமுவ பிரதேச செயலாளர் ஆர்.பி.டி.சுமனசேகரவிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த குற்றச்சாட்டின் போதே இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை மறுத்த அம்பகமுவ பிரதேச செயலாளர் ஆர்.டி.பி. சுமனசேகர நான் யாருக்கும் இந்த காணிகளை சட்ட விரோதமாக விற்பனை செய்யவில்லை. அண்மையில் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட ஹற்றன், சமனலகம பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்குவதற்கே இந்த இடத்தினை வழங்கியதாக தெரிவித்தார்.

எவவாறாயினும் வெளியாருக்கு குறித்த காணிகளை விற்பனை செய்ய நாங்கள் இடமளிக்கமாட்டோம் என மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் கருத்து தெரிவித்துள்ளார்.

அவ்வாறு காணிகள் விற்கப்படுமாயின் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு நாங்களும் எமது எதிர்ப்பினை வெளியிடுவோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார். (இ-7)

# மதுப்பிரியர்களால் மாணவிகளுக்கு அசௌகரியம்

## பரு.பிரதேச சபைக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

புலோலிப் பகுதியிலுள்ள மதுபானசாலையில் மது அருந்துவோரால் பாடசாலை முடித்து வரும் மாணவிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபை மாதாந்தக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்து தெரிவித்த பிரதேச சபை பெண் உறுப்பினர் ஒருவர்,

ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் மது அருந்துவோர் வீதியால் செல்லும் மாணவிகளை தவறான வார்த்தைகளைக் கூறி அழைப்பதாகவும் இம் மது விற்பனை நிலையத்திற்கு பருத்தித்துறை பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர் அந்த மதுபானசாலைக்கு தாம் அனுமதி கொடுக்கவில்லை எனவும் முன்னைய பிரதேச சபையின் ஆட்சியில் அனுமதி கொடுக்கப்பட்டது எனவும் மதுபானசாலைக்கான அனுமதி மதுவரித் திணைக்களத்தாலும் பிரதேச செயலகத்தினாலுமே வழங்கப்படுகிறது. அதன் பின்னர் வியாபாரத்திற்கான வரியினை மட்டுமே பிரதேச சபை பெறுகிறது.

ஆனால் இப்பிரச்சினை தொடர்பில் பிரதேச செயலாளரின் கவனத்தில் கொண்டு வரப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# புகையிரத ஊழியர்களின் சம்பள பிரச்சினை குறித்து அமைச்சரவை பத்திரம்

புகையிரத ஊழியர்களின சம்பளப் பிரச்சினை சம்பந்தமான அமைச்சரவை பத்திரம் ஒன்று நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

அதன்படி அந்த பத்திரத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு வார காலம் பிற்போடப்பட்டதென்று அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

சம்பளப் பிரச்சினையை முன்னிறுத்தி கடந்த 05 நாட்களாக புகையிரத தொழிற்சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த நிலையில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியையடுத்து போராடடம் கைவிடப்பட்டது. (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஸ்ரீ 108 வைணவத் திருத்தலங்கள்**

திருநீர்மலை
திருவிடந்தை
மகாபலிபுரம்
சோளிங்கர்
சரயு-அயோத்தி
நைமிசாரண்யம்
நந்தப் பிரயாக்
தேவப்ரயாகை
பத்ரிநாத்
முக்திநாத்
மதுரா
ஆயர்பாடி
துவாரகை
அஹோபிலம்
திருப்பதி
திருநாவாய்
திருவித்துவக்கோடு
திருக்காக்கரை
திருமூழிக்களம்
திருவல்லவாழ்பந்தனம்

*(தொடரும்)*

# அரச ஊழியர்களின் சம்பள உயர்வை ஆராய சிறப்புக் குழு

அரச துறை உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சிறப்பு சம்பள ஆணைக்குழுவை நியமிக்க அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த தகவலை அமைச்சர் மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரச உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகப் படிகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சிறப்பு சம்பள ஆணைக் குழுவை நியமிக்க நிதி அமைச்சர் அமைச்சரவையிடம நேற்று கோரியிருந்தார்.

அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. அரச துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை மாற்றியமைப்பது தொடர்பில் 2 மாதங்களுக்குள் சம்பள ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

# சீருடை வவுச்சர் அடுத்த மாதம்

பாடசாலை சீருடைத் துணிக்கான வவுச்சர் இந்த ஆண்டில் நேர காலத்துடன் வழங்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவா விதாரண தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் பிரிவெனாக்களில் கற்கும் பிக்குகளுக்கும் இந்த வவுச்சர் வழங்கப்படவிருக்கிறது.

இதற்கென அரசாங்கம் இந்த ஆண்டில் 250 கோடி ரூபாயை செலவிடுகிறது. (ம)

# ரூ.5 இலட்சத்து 75ஆயிரம் பெறுமதியான வல்லப்பட்டையுடன் இளைஞர் கைதானார்

(கொழும்பு)

ஐந்து இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வல்லப்பட்டை தொகையை சட்டவிரோதமாக தாய்லாந்துக்கு கொண்டு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் விமான நிலையத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 24 வயது குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்லப்பட்டை அரசுடைமையாக்கப்ப டதுடன், சந்தேக நபருக்கு 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நல்ல எண்ணம் வேண்டும்



✦ குடும்ப வாழ்வில் இருந்து கொண்டு, கடவுள் மீது பக்தி செலுத்துபவனே வீரம் மிக்கவன்.

✦ மனதில் நல்ல எண்ணம் இருந்தால் தான் தூயபக்தி உண்டாகும்.

✦ கடவுள் என்னும் எஜமானனுக்கு பணிவிடை செய்து வாழ்வது தான் பிற விப்பயன்.


✦ படிப்பதை விட கேட்டு அறிவது உயர்ந்தது. நேரில் கண்டு உணர்ந்து கொள்வது இன்னும் சிறந்தது.

✦ விவேகம் இல்லாதவனுக்கு எத்தனை சாஸ்திர அறிவு இருந்தாலும், அதனால் பயனேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கிரிக்கெட் லீக்-2018

## கே.சி.சி.சி.அணிக்கு முதல் வெற்றி




யாழ்.கிரிக்கெட் தொடருக்கான ஏ.பி.விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் லீக் வரிசையில் நடைபெற்ற போட்டி ஒன்றில் கே.சி.சி.அணி திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியை 19 ஓட்டங்களால் வெற்றி பெற்று தங்களது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 20 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. சத்தியன்-40, பிரதீசன்-47, பானுஜன்-31, திருத்திகன் ஆட்டமிழக்காது -23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாஸ்-1, ருஷாந்தன்-2, அஜன்தன்-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றனர். சுதாகரன்-26, கௌசீகன்-25, கரன்-22, நிஷாந்தன்-13 ,ருஷாந் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாம்பவன்-1, சதயன் -1, துசிதரன்-2, கஜனன்-4 இலக்குகளைக் கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு கே.சி.சி.சி. அணி 4.80 புள்ளிகளையும் திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. அணி 2.12 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

## யூனியன்ஸ் அணியின் 2 ஆவது வெற்றி




யாழ்.கிரிக்கெட் லீக் தொடருக்கான சுற்றுப் போட்டியில் மற்றொரு போட்டியில் யூனியன்ஸ் அணி மானிப்பாய் பரீஸ் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப் பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. நிதர்ஸன்-40, கிசோக்குமார்-33, சூரி-ஆட்டமிழக்காது-41, குகபிரசாத்-18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜன்தன்-2, தர்ஸன்-1, தயாளன்-2, மகிதரன்-2 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 18.1 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றனர். ஜான்சன்-45, பிரசாத்-56, லவன்-14, ஆகீசன்-16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கனிஸ்ரன்-3, குகபிரசாத்-1, யாழினியான் இலக்கினை கைப்பற்றினா. இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யூனியன்ஸ் அணி 4.77 புள்ளிகளையும் மானிப்பாய் பரீஸ் அணி 2.26 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2018 இற்கான வட மாகாண கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது. இப் போட்டியில் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் இல்ல வீர, வீராங்கனைகள் 52 பதக்கங்கள் பெற்று இல்லத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். (க)

## கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் சைனிங்ஸ் மூத்த உறுப்பினர் அமரர். நடராச வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தும் வுடமாகாண ரீதியிலான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு வல்வெட்டித்துறை சைனிங்ஸ் ரேவடி கடற்கரை கரப்பந்தாட்ட மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை நடைபெறவிருக்கின்றது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 077 617 6988, 077 412 6496 ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும். (க)

## அதிக கிண்ணம்;மெஸ்சியின் சாதனை



ஸ்பெயினின் கிளப் கால் பந்து அணியான பார்சிலோனாவிற்கு, அதிக கிண்ணங்களை வென்று கொடுத்தவர்களின் பட்டியலில் லயோனல் மெஸ்சி முதலிடத் தில் உள்ளார்.

அர்ஜெண்டினா கால் பந்து அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி, ஸ்பெயினின் கிளப் அணியான பார்சிலோனாவிற்கு விளையாடி வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற சுப்பர் கோபா இறுதிப் போட்டியில் பார்சிலோனா 2-1 என செவியா அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதன்மூலம், பார்சிலோனா அணிக்கு அதிக கிண்ணங்களை வாங்கிக் கொடுத்த வீரர் என்ற பெருமையை மெஸ்சி பெற்றுள்ளார். இதுவரை அவர் 33 முறை சம்பியன் பட்டத்தை பார்சிலோனாவிற்கு வென்று கொடுத்துள்ளார்.

இதற்கு முன்பு இனிய [illegible] 32 முறையும், [illegible] பிக்காய் 28 முறையும், பஸ்குயட்ஸ் 28 முறையும், சேவி 25 முறையும் சம்பியன் பட்டங்களையும் வென்று கொடுத்துள்ளனர். (க)

## முதலிடத்தைத் தவறவிட்டார் இந்திய அணித் தலைவர்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விராட் கோலி துடுப்பாட்ட தரவரிசையில் முதலிடத்தை இழந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் 149 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்சில் 51 ஓட்டங்களும் குவித்த இந்திய அணி தலைவர் கோலி டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறினார்.

இந்நிலையில் லார்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் கோலி துடுப்பாட்டத்தில் சொதப்பினார். இதனால் 15 தரவரிசை புள்ளிகள் இழந்த அவர் (919 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இதன்மூலம் பந்தை சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கி ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்ட அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் சுமித் (929 புள்ளிகள்) 2ஆவது இடத்தில் இருந்து முன்னேறி மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுமாப்பும், அகந்தையுமே...

Chithambara Maths Challenge ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கணிதப் போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா நேற்று வல்வெட்டித்துறை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக எமது பிரதேசத்தில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி நிலையில் பின்தள்ளப்பட்டனர்.

அவர்களின் குடும்பங்களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகினர். வீடு, வாசல் சொத்துக்களை இழந்து தொழில் முயற்சிகளின்றி அல்லற்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் அவர்களுக்கான விரைந்த உதவிகள் நேரடியான உறவுகளின் மூலமாகவும் புலம்பெயர் அமைப்புக்களின் ஊடாகவும் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளில் இருந்து பலதரப்பட்ட மக்கள் இங்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக வருகை தருகிறார்கள். அத்துடன் தெற்கில் இருந்தும் திட்டமுன்மொழிவுகளைத் தருகின்றார்கள். ஆனால் அவர்களின் திட்டமுன்மொழிவுகளை ஆராய்ந்து பார்த்தால் அவை பெரும்பாலும் நிலச்சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களாகவோ அல்லது இப்பகுதிகளில் உள்ள கனியவளங்களையும் ஏனைய உற்பத்திகளையும் சுரண்டிச் செல்லுகின்ற திட்டங்களாகவோ அமைந்திருப்பதைக் காணலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்தில் இருந்து இன்று வரை எமது தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற சிந்தனைகளும், இறுமாப்புத் தன்மையும், அகந்தையும், சமூக வேறுபாட்டுக் கொள்கைகளும் மற்றும் இன்னோரன்ன காரணிகளே நாம் தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளை சந்திப்பதற்கான ஏதுக்களாக இருந்து வந்துள்ளதை நாம் காண்கின்றோம்.

இந்த நிலையில் நாம் எமது இருப்புக்களை உறுதி செய்து எம் மீது திணிக்கப்படுகின்ற அரசியல் அழுத்தங்களிற்கு முகம்கொடுத்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் அதற்குரிய கல்வி நிலையை நாம் பெற்றுக் கொள்ள முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

தினம் தினம் பத்திரிகைகள் தாங்கி வருகின்ற செய்திகள் எம்மைத் திகைக்க வைக்கின்றன. ஒரு காலத்தில் முழு இலங்கைக்கும் முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக விளங்கிய வடபகுதி இன்று இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

இவற்றையெல்லாம் சீர் செய்ய ஸ்திரமான ஒரு அரசியல் அமைப்பும் அதைத் தயாரிக்க மக்கள் பங்களிப்பும் அவசியமானவை. அதற்கான வழிமுறைகளை நாம் அனைவரும் இணைந்துகொண்டு முன்னெடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(ம-9)

## நாட்டின் வருமானம்...

சதவீதமாக மட்டுப்படுத்துவது 2020ஆம் ஆண்டுக்குரிய இலக்காகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூச்செடுக்க மூன்று வருடங்கள் என்ற தொனிப்பொருளின் கீழ் குருநாகலில் பூர்த்தி செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பிரதமர் தலைமையில் மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டன.

மூச்செடுக்க மூன்று வருடங்கள் என்ற தொனிப்பொருளின் கீழ் பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் சீன மற்றும் இலங்கை அரசாங்கத்தின் 15,500 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குருநாகல் மாவட்டத்தில் 27 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 45,000 பேர் பயனடையவுள்ளனர்.

கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது திட்டம் இதுவாகும்.

இத்திட்டத்தின் மூலம் குருநாகல் நகரை சூழவுள்ள நிலத்தடி நீர் சுத்தமடைவதுடன கழிவு நீரினால் ஏனைய நீர் வளங்கள் பாதிப்படைவதும் முற்றாக தடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இலங்கைக்கான சீனத் தூதுவர் சென் சுயேயுவேன், அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம், எஸ்.பி. நாவின்ன, பிரதியமைச்சர் அசோக அபேசிங்க, இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம)

## நீதிமன்ற உத்தியோகத்தரின்...

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள மேலதிக நீதவான் நீதிமன்றில் வரணியைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் கடமையாற்றுகிறார். அவர் பேருந்தில் வந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இறங்கி பழைய பூங்கா வீதி ஊடாக நடந்து சென்றுள்ளார்.

அப்போது பின் தொடர்ந்த கொள்ளையர் ஒருவர் நீதிமன்ற உத்தியோகத்தரின் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார். எனினும் அவர் சங்கிலியை கைகளால் இறுகப் பிடித்துக் கொண்டதால், கொள்ளையரின் முயற்சி தடுக்கப்பட்டது. எனினும் நீதிமன்ற உத்தியோகத்தரின் கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. (ம)

## வடக்கு-கிழக்கில் மீன்...

நிதி வழங்கப்படுவதாக பிரிட்டன் அரசு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற பிரிட்டன் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும். இதற்கு பிரிட்டன் வாழ் புலம் பெயர் சமூகமும் ஒத்துழைக்கும் என நம்புகின்றேன். பிரிட்டனின் ஆசிய மற்றும் பசுபிக் அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார். (ம)

## ஆவா குழுவினர்...

ச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம)

## தொழிலுக்குச் சென்ற...

6 பிள்ளைகளின் தந்தையான முஸ்தபா அப்துல் ரசூர் (வயது 56) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் நேற்று முன்தினம் நண்பகல் யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரையில் இருந்து நண்பர்களுடன் மீன்பிடிக்க சென்றுள்ளார்.

கரையில் இருந்து 60 கிலோமீற்றர் தூரம் சென்ற போது திடீரென படகில் மயங்கி விழுந்துள்ளார். மயக்கமடைந்தவரை நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து அனுமதித்த போது குறித்த மீனவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## கிளிநொச்சி விஜயம்...

ஆசி பெற்றுக்கொண்ட பிரதமர், வழிபாட்டிலும் கலந்து கொண்டிருந்தார்.

இன்று புதன்கிழமை பிரதமர், மன்னாரில் அமைந்துள்ள மடு திருத்தலத்திற்கு விஜயம் செய்து மடுத்திருவிழாவிலும் பங்கேற்கவுள்ளார்.

இதன்போது அவர் மன்னார் ஆயர், மறைமாவட்ட குருக்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் சில அபிவிருத்தி பணிகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பார்வையிடவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம)

## எழுத்து மூலம் ஆளுநர்...

டும் என வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

அதில்தற்போது இடம்பெற்றுவரும் வடக்கு மாகாண அமைச்சரவை விவகாரம் தொடர்பிலும், மேன்முறையீட்டு நீதிமன்றின இடைக்காலத் தடை உத்தரவால் வடக்கு மாகாண அமைச்சுக்கள் தொடர்பாக எழுந்துள்ள குழப்பநிலையைத் தீர்ப்பதற்கு அமைச்சர்கள் தாமாக பதவி விலக வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்திருந்தார். இது தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மாகாண அமைச்சர்களின் பதவி விலகல் தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் முதலமைச்சருக்கோ எமக்கோ கிடைக்கவில்லை.

வடமாகாண ஆளுநர் அமைச்சர்களின் பதவி விலகல் தொடர்பாக இவ்வாறான எண்ணப்பாடு இருந்தால் அதை எழுத்து மூலம் முதலமைச்சருக்கு தெரியப்படுத்துவதன் ஊடாக அந்த நடவடிக்கைகள் பற்றி பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பின்னர் ஏற்கனவே இருக்கின்ற 5 அமைச்சர்களும் ஒன்றுகூடவில்லை. ஏனைய அமைச்சர்களின் நிலைப்பாடு தொடர்பில் என்னால் கருத்து கூற முடியாது. ஆனால் டெனீஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்த வர்த்தக வாணிப அமைச்சை மீளத்தருமாறு முதலமைச்சர் கோரினால், முதலமைச்சரிடம் நான் மீளக் கையளிப்பேன் என தெரிவித்தார். (ம-9)

## தாயகத்தில் இடம்...

சமகால நிலைமைகள் தொடர்பாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதன் போது கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் எமது மக்களின் வாடிகள் எரிக்கப்பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்க விடயம். இதே போன்று வடமராட்சி பகுதியில் தென்பகுதியை சேர்ந்த அத்துமீறிய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மீனவர்கள் போராடினார்கள். அதன் பின்னர் கடந்த மாதம் வடமராட்சிப் பகுதியில் 2 முறை மீனவர்களின் படகு இனந்தெரியாதவர்களால் எரிக்கப்பட்டது.

குறித்த சம்பவங்களை அரசு கண்டும் காணாமல் நீதியை வழங்காமல் இருந்ததன விளைவு தான் தற்போது நாயாறு வாடிகள் நாசமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மத்தியின் ஆதரவுடன் நடைபெறுகிறதா என்ற சந்தேகம் எமக்கும் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

யுத்தத்தின் காரணமாக எமது மக்கள் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் இழந்த மக்கள் பல கடன்களை பெற்று தான் இந்த மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். பெரும் தொகைக்கு படகுகளை வாங்கி தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கிறார்கள். இந்த நிலையில் அவர்களின் வாழ்வாதாரங்களை நீர்மூலம் ஆக்கி மீண்டும் இன அழிப்பை செயற்படுத்தும் திட்டத்தை இந்த அரசு மேற்கொள்கிறது.

சட்ட ரீதியற்ற தொழில் செய்யும் தென் பகுதி மீனவர்களுக்கு படைத்தரப்பு பாதுகாப்பு வழங்கும் சூழல் தொடர்ந்து நடைபெறுகிறது. இது நல்லாட்சி அரசை கேள்விக்குறியாக்கியுள்ளது.

அரச தரப்பில் இருந்து நட்டஈடு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் எவையும் நடைபெறவில்லை. மீனவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் அரசு உள்ளது.

அண்மையில் அமைச்சர் வந்து வாக்குறுதி அளித்து சென்ற பின்னர் துணிகரமாக இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. எமது கைகளை கட்டிவிட்டு அடிக்கும் நிகழ்வு தான் இப்போது நடக்கிறது.

எமது மக்கள் இலங்கை அரசின் சட்ட முறைகளை பின்பற்றி தான் வாழ்ந்து வருகிறார்கள் இதன் விளைவு தான் அராயகமாக செயற்படுகிறார்கள்.

கடந்த 1958 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தமிழர்கள் எரிக்கப்படுவது தான் வரலாற்று நிகழ்வாக உள்ளது. இந்த விடயம் தொடர்பாக சர்வதேசம் கூடிய கவனத்தை கொண்டிருக்க வேண்டும் ஏனெனில் நல்லாட்சி அரசு இன அழிப்புக்கான பொறுப்பு கூறலை கூறாதவிடத்து இன்றும் தாயக மண்ணில் இவ்வாறான இனஅழிப்பு நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

ஒட்டுமொத்த மீனவ சங்கங்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் அனைத்தும் அணிதிரண்டு இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். இனிவரும் காலத்திலாவது எமது மீனவர்கள் தமது கடற்பரப்பில் சுயமாக பாதுகாப்பாக தமது தொழிலை செய்வதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## தமிழர் படு...

தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த கடற்படைச் சிப்பாய் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

இந்தத் தகவலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வரை தடுத்து வைத்து விசாரிக்க குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றின் அனுமதியைக் கோரினர். நீதிமன்று அனுமதி வழங்கியது.

கொழும்பு லோட்டஸ் வீதியில் போலி அடையாள அட்டையுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டார்.

2008 மற்றும் 2009 ஆண்டு காலப் பகுதியில் கொழும்பு மற்றும் சுற்றுப் புறங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் தேடப்பட்டு வந்தார்.

வெல்லம்பிட்டிய வைச் சேர்ந்த 41 வயதுடைய இவர் கடற்படையில் லெப். கொமாண்டர் தர அதிகாரியாக பணியாற்றியவர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இவரைக் கைது செய்வதற்கு உதவுமாறு பொலிஸார் இவரின் படத்தை பலமுறை வெளியிட்டிருந்தனர்.

அவரை மறைத்து வைத்துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்ப்பாண...

காற்று வீசியதுடன் மழையும் பொழிந்தது.

இதனால் நேற்று இரவு சில மணி நேரம் யாழில் பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

வடமராட்சிப் பகுதியில் சுழல் காற்றுடன் கூடிய மழை பொழிந்ததனால் வீதியில் சென்றவர்கள் பெரும் அல்லல் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-60)


சேவன
திகதி 2018/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 109
ஆங்கில எழுத்து Q
வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 13 42 46

கொவிசெத
திகதி 2018.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 1851
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 16 20 79

மஹஜன சம்பத
திகதி 2018/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 3724
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 7 9 1 9

நீரோகா
திகதி 2018/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 433
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 07 17 68 69 22

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

இராசாவின் தோட்டம் TCT முன்பாக ஐந்து அறைகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (5367)

தொடர்புகளுக்கு:- 077 515 1352

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப் பெண் தேவை. (5368)

தொடர்பு : 0773282051

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-3496)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு

- UK – 550 /=Kg
- கனடா – 900 /=Kg
- ஜேர்மனி – 700 /=Kg
- நெதர்லாந்து – 700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்

## நியூசிலாந்து நாட்டில்

கல்வி - தொழில் - நிரந்தர குடியேற்றம்

அனைத்து வகையான கற்கைநெறிகளிலும் டிப்ளோமா, பட்டக்கல்வி பட்ட மேற்படிப்பு

54 வகையான வேலைகளுக்கு
500க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

அனைவருக்கும் நிரந்தர குடியேற்றம்

விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்

18-08-2018 வெள்ளி மதியம் 1.30மணி

கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்

Student Visa – Work Visa – Spouse Visa – Skilled Migration to UK – Australia – New Zealand - Canada – Malaysia

விபரங்களுக்கு 0777 324 004

10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

இல. 221 - 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11

## உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

CNR Courier & Cargo

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-3497)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532



# VACANCY

ARE YOU THE **RIGHT** PROFESSIONAL **WE ARE SEEKING?**

## For Coordinator (Female)

Scheduling daily time tables and examinations, Handling telephone and face – to-face enquiries, Developing and maintaining effective relationships among the students and the staff.

- Should have passed A/L
- Excellent knowledge in English (spoken & Written)
- Computer skills in ms Word & Excel



**Other Vacancies**

- Marketing Representative
- Kids`Teachers
- Cleaning Staff (Lady)

Please submit your resume with a recent photograph and cover letter by e-mail:**Jaffnabwea@gmail.com**
Apply before 29th of April
British Way English Academy

தொடர்புகளுக்கு : 0767659415
Jaffnabwea@gmail.com
முடிவுத் திகதி : 20.08.2018
HR DIVISION
(C-3501)


## அருள் கல்வி நிலையத்தின் அதிபர்
## உயர்திரு. இரா.அருட்செல்வம் அவர்களின்
# மணிவிழா
## மற்றும் ATC கல்வி நிலைய 40 வது ஆண்டு நிறைவும்



காலம் : 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2.00 மணி
இடம் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம்
தலைமை : பேராசிரியர் க.தேவராஜா

## நிகழ்ச்சி நிரல்

பி.ப 2.00 மணி : விழா நாயகரை அருள் கல்வி நிலையத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்து வரல்

பி.ப 3.00 மணி : மங்கல விளக்கேற்றல்

பி.பு 3.15 மணி : தேவாரம்
**திரு.கு.அனுசன் ஆசிரியர்**

பி.ப 3.20 மணி : வரவேற்பு நடனம்
**அருள் கல்வி நிலைய மாணவர்கள்**

பி.ப 3.30 மணி : வரவேற்புரை
**திரு.பா.சத்தியமூர்த்தி ஆசிரியர்**
உபதலைவர்–மணிவிழாச்சபை

பி.ப 3.40 மணி : ஆசியுரைகள்

**சிவஸ்ரீ சோ.பிரசன்னக் குருக்கள்**
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
**சிவஸ்ரீ உ.அபராஜிதக்குருக்கள்**
இணுவில் கந்தசுவாமி கோவில்
**திருஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**
நல்லைக்குரு மகாசந்நிதானம்
**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர்.தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் சிவபூமி அறக்கட்டளை

மாலை 4.00 மணி : தலைமையுரை

மாலை 4.10 மணி : தொடக்கவுரை
**தேசகீர்த்தி**
**திரு.ஞான திருக்கேதீஸ்வரன் ஆசிரியர்**
அமைப்பாளர். மணிவிழாச்சபை

மாலை 4.20 மணி : **வாழ்த்துரைகள்**
**திரு.அ.பஞ்சலிங்கம்**
ஓய்வுநிலை அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

மாலை 4.25 மணி : **பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்**
துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்

மாலை 4.30 மணி : **திரு.என்.பாலகிருஸ்ணன்** ஆசிரியர்

மாலை 4.35 மணி : **திரு.இரா.செல்வவடிவேல்**
ஆசிரியர்

மாலை 4.40 மணி : **திரு.சு.சண்வாமதேவன்**
ஓய்வுநிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர்

மாலை 4.45 மணி : **திரு.சு.சண்முககுமார்**
ஓய்வுநிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர்

மாலை 4.50 மணி : **திரு.பா.பாலமகிந்தன்**
கணினி முகாமையாளர் வேலணை கல்வி வலயம்.
ஆசிரியர்.கே.ரி.சி

மாலை 4.55 மணி : **கவிதாஞ்சலி**
**திரு.கு.மதுசுதன் ஆசிரியர்**

**திரு.க.வசீகரன்**
தலைவர் - இணுவில் பொது நூலகம்

மாலை 5.00 மணி : மலராசிரியர் உரை
நூல் வெளியீட்டுரை

**கலாநிதி க.ஸ்ரீகணேசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஆங்கில மொழி கற்பித்தல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

### நூல் வெளியீடு
### “அருள் கலசம்”

மாலை 5.10 மணி : நூலின் முதற் பிரதியை பெற்றுக்கொள்ளலும் கௌரவிப்பும் விழா நாயகருக்கு கற்பித்த ஆசிரியர்களான

**திரு.எஸ்.மகேந்திரம்** – ஆசிரியர்
**திரு.நா.சின்னராசா** – ஆசிரியர்
**திருமதி பண்டிதை தனலட்சுமி** – ஆசிரியர்

### ஆகியோரை விழா நாயகர் கௌரவித்தல்

மாலை 5.30 மணி : ஏற்புரை
**விழா நாயகர் நினைவுத்தடங்கள்**

மாலை 5.50 மணி : கௌரவிப்பு நிகழ்வுகள்
**மணிவிழாச்சபை**

மாலை 6.00 மணி :
*அருள் கல்வி நிலைய பழைய மாணவர்கள் 1977–2017 வரை 40 அணிகளின் கௌரவிப்பு*

மாலை 6.20 மணி : **கௌரவிப்பு**
ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்

மாலை 6.30 மணி : **நன்றியுரை**
**திரு.சொ.ஹரிசங்கர்** – செயலாளர்

*பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**– மணிவிழாச் சபை**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org